# திராவிடநாடு

15—4—62 | வார வெளியீடு | விலை 16 காசு


## ஒளி மலை

எழுந்தது, ஞாயிறு கீழ்த்திசையில்;
சூழ்ந்த காரிருள் சுக்குநூருய்ப் பறந்தது!
வாழ்ந்த தமிழ் மன்னர் படைபோல்
வரிப்புலி(க்) கூட்டம் வாகைசூடிக் கிளம்பிற்று; கடல்
அலைதொட அமைந்திருக்கும் அரியணையில்; எதிர்க்கட்சி
அடலேருய் அமர்ந்தது கழகம்!
தூசென எண்ணியோர்; தொடைநடுக்கம் கொண்டனர்
மாசென எண்ணியோர்; மாச்சர்யம் கொண்டனர்!
மக்கள் நெஞ்சில் வாழும் கழகம்
மளமளவென்று வளர்வது கண்டு
மமதைகொண்ட அரசினர் இன்று; ஒளி
மாமலை கண்டு 'பேய்'என அலறுகிருர்!
கைமண் கொண்டு காட்டாற்றை மறிப்பதுபோல்
கழகத்தை வீழ்த்திடக் கங்கணம் கட்டுகிருர்!
நீர்மேல் குமிழிபோல் நிலையற்ற ஆட்சியில்
பார்புகழ் கழகத்தைப் பழித்திடல் முறையோ?
தேரற்ற குடை பாழ்பட்டொரு நாள்,
தெருப் புழுதியில் பறப்பதேபோல்
கோடற்ற ஆட்சி சோலுவற்றொருநாள்
கேடுற்று அழிவது தெளிவுற்ற உண்மை!

—கவிஞர் "சுரா"

# வாழ்ந்த குடி

—[கனகு]—

மற்றவர்கள் பெரும் யோசனையில் ஆழ்ந்தார்கள். அவனை மடக்குவது எப்படி என்று அவர்களுக்குப் புலப்படவில்லை. சிறிதுபொழுது கழிந்தது. முருகேசனாரின் நண்பர் மெல்லத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேசத் தொடங்கினார்.

“சுதந்தரமோ, என்னவோ! அதைப்பற்றியெல்லாம் உன்னிடம் வாதம் செய்வதற்கு என்னால் முடியாது. ஆனால் ஒரே ஒரு வார்த்தை—நான் சொல்கிறேன். கேட்கிறாயா?”

“என்ன வார்த்தையோ?”

“முருகேசனார் உனக்குப் பல வகையில் நன்மை செய்திருக்கிறார் இல்லையா?”

“அதை மறக்க முடியுமா?”

“அவர் பிள்ளையும் அதேபோல் உனக்கு நீண்ட நாள் நண்பன் இல்லையா?”

“இதையெல்லாம் யாரும் நினைவு படுத்த வேண்டுவதே இல்லையே!”

“நல்லது செய்த அவர்களுக்கு நீ நன்றிக் கடன் காட்டவேண்டும். குறிப்பாக முருகேசனாருக்கு நீ பெரியதொரு உதவி செய்தேதான் தீரவேண்டும். ‘மறக்க முடியுமா? யாரும் நினைவுபடுத்த வேண்டுவதில்லை’ என்று வாயால் சொன்னால் போதாது. செயலால் செய்து காட்ட வேண்டும் நீ! அதற்குச் சரியான சந்தர்ப்பம் இப்போதுதான்!—என்ன புரிகிறதா?”

கார்த்திகேயன் பேசாமல் இருந்தான். திரும்பவும் அந்த மற்றவர் பேசினார்.

“ஒரு விஷயம் சொல்கிறேன். ஒருவர் தனக்குச் செய்த உதவிக்காகக் காட்ட விரும்புகின்ற நன்றிகளுக்கெல்லாம் மிகச் சிறந்த நன்றி, உதவி செய்தவர்களின் உள்ளம் புண்படாத வண்ணம் நடந்துகொள்வதுதான். அப்படிப் பார்க்கும்போது வேறு எத்தனையோ முறைகளால் நீ உன் நன்றியை முருகேசனாருக்குத் தெரிவிப்பதைவிட, அவர் உள்ளம் அமைதிகொள்ளுமாறு, வருந்தாமலிருக்குமாறு நடந்துகொள்வது ஒன்றே ஒன்றுதான் மிகச் சிறந்த முறையில் நன்றிக்கடன் ஆற்றுவதாகும்! — என்ன புரிகின்றதா? — ஆகவே, அந்த வகையில் இப்போது நீ நடந்து கொண்டால் அதுவே போதும்! — வேறொன்றும் இதற்குத் தேவையில்லை. அதற்காக நீ முருகேசனாரை ஆதரிக்க வேண்டும் என்பதில்லை. அவர் பக்கம் வாசுவை திருப்பிக்கொண்டு வந்துவிட வேண்டும் என்பதுமில்லை. இப்படியுமில்லாமல், அப்படியுமில்லாமல் நீ நடுநிலைமையாய் நின்றுவிட்டால் போதும்!”

“என்ன?” என்று திடுக்குற்றாற்போல் வினவினான் கார்த்தி.

“அதாவது நீ வாசுவுடன் நெருங்கிய நட்பு கொண்டாடுகின்றாய் அல்லவா! சிறிது காலத்துக்கு அந்த நட்பை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். அவனுடன் உரையாடக் கூடாது. அவன் செல்லுமிடத்திற்கு நீ போகக்கூடாது! அவன் பழகுமிடங்களில் நீ பழகுவதும் கூடாது—அது எவ்வளவு முக்கியம் வாய்ந்த இடமாயிருந்தாலும் சரிதான்.”

‘இப்படித்தான் நன்றிக்கடன் காட்ட வேண்டுமா?’ என்று உரக்க வினவவில்லை கார்த்தி. உள்ளத்துள் அப்படிக் கூறிக்கொண்டான். பிறகு கம்மிய குரலில் வினவினான்” “இதுதான் உங்கள் முடிவான கோரிக்கையா? இதை உங்களால் மாற்றிக்கொள்ளவே முடியாதா?”

‘பயல் சரியானபடி சிக்கிக் கொண்டுவிட்டான். இனி அவன் நம் வலையில் விழுந்துவிட்ட மாதிரிதான். இப்படி, அப்படி அசைய முடியாது.’ என்று முருகேசனாரும், அவர் நண்பரும் கார்த்தியின் தழுதழுத்த குரலைக்கேட்டு உள்ளுக்குள் சொல்லிச் சிரித்து மகிழ்ந்துகொண்டார்கள்.

“இதற்கு இப்போது என்னால் பதில் சொல்ல முடியவில்லை. காரணம், நீங்கள் சொல்வது என்னவென்றே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதைப்பற்றி ஆர அமர யோசித்து உங்களிடம் பதில் சொல்கிறேன்!” கார்த்தி எழுந்தான்.

“ஆர அமர யோசித்து என்று நாளைக் கடத்திக்கொண்டு போய் விடாதே! இந்த நிபந்தனைகூடக் குறிப்பிட்ட ஒரு கெடுவரையிலும்தான். அதன் பிறகு நாங்களே அந்த நிபந்தனையைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறோம்!” என்று முருகேசனார் எழுந்து நின்ற கார்த்தியின் கையைப் பற்றிக்கொண்டு கூறினார்.

‘சரி’ என்று தலையாட்டிவிட்டு, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான் கார்த்தி.

“நில்லு, நில்லு! எங்கே அதற்குள்ளே நழுவிடப் பார்க்கிறே! — அதிலே இன்னொரு விஷயத்தையும் நீ தெரிந்துகொள்ள வேண்டுமே!” என்று கிளம்பிச் செல்ல முனைந்தவனைத் தடுத்து நிறுத்தினார் மற்றவர்.

‘இன்னும் என்ன பேரிடியைத் தலையிற்போடப் பார்க்கிறீர்கள்?’ என்று வினவுவதுபோல் நிமிர்ந்து பார்த்தான் கார்த்தி.

“திரும்பவும் நினைவுவைத்துக் கொள்! இது நிபந்தனை அல்ல. எங்கள் கோரிக்கை! இதன்படி நீ நடந்துகொள்வதும் நடக்காமல்விடுவதும் உன் விருப்பத்தைப் பொறுத்தது. நாங்கள் சொல்லவேண்டியதை எல்லாம் சொல்லிவிட்டோம்!

(4-ம் பக்கம் பார்க்க)

# தேர்தல் தில்லுமுல்லுகள்

மலர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (15—4—62) தனிப்பிரதி 16 காசு [ இதழ்

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் உலக ஒழுங்குமுறைக்கு அப்பாற்பட்டது—ஜனநாயகமுறைக் குப் புறம்பானது — நாகரிகமுறைக்கு நாசம் விளைவிப் பது — அரசியல்முறைக்கு அலங்கோலமாக அமைந் தது என்பனவற்றிற்கு எத்தனையோ மேற்கோள்களை எடுத்துக்காட்ட முடியும்.

ஒவ்வொரு தொகுதியிலும் நடைபெற்ற தேர்தல் வேலைமுறைகளை உடனிருந்து கவனித்துவந்த எந்த நடுநிலைமையாளருக்கும் இந்த உண்மை பளிச்செனத் தெரியும்.

பதவியின் பலத்தாலும், பணத்தின் உதவியாலும், பழிசுமத்துவதாலும் பல திறப்பட்ட ஒழுக்கக்கேடுகள் இந்தத் தேர்தலில் இடம்பெற நேர்ந்துவிட்டதென்பது எல்லோராலும் அறியக்கூடிய இரகசியமாகிவிட்டது.

நான் யார் தெரியுமா என்று கேட்டு மிரட்டி ஒட்டு வாங்கியதாகவும்; பணத்தைக்காட்டி ஒட்டுப்பெற்ற தாகவும்; பகவான் படத்தைக்காட்டி ஓட்டுப்பெற்றதாக வும் பல வதந்திகள் இந்தத் தேர்தல் முடிந்தவுடன் உலவத்தொடங்கின.

வதந்திகள் எப்போதுமே உண்மைகளாகிவிடுவ தில்லை. வதிந்திகள் பெரும்பாலும் வேண்டுமென்றே கட்டிவிடப்படுபவைதான், என்றபோதிலும், சில சமயங் களில் பரப்பப்பட்ட வதந்திகள் உண்மையாகவும் ஆகி விடுவதுண்டல்லவா!

ஆனல், இந்தத் தேர்தலில் நடமாடவிட்ட வதந்தி களை வதந்திகளாகவே வைத்துக்கொள்வோம்.

எப்படியிருந்தபோதிலும், இந்தத் தேர்தல் என் னவோ நியாய வரம்புக்கு உட்பட்டு—மனிதப் பண்புக்கு மதிப்புத் தரப்பட்டு நடைபெற்றுவிட்டதாக மட்டும் சொல்வதற்கில்லை.

நடந்த முடிந்த தேர்தலில் எழுபதுக்கு மேற்பட்ட தொகுதிகளில் ஒழுங்கீனங்கள் கையாளப்பட்டு, அதனல் வெற்றிபெறும் வாய்ப்பற்றவர்களே வெற்றிபெற்று விட்டதாகவும், நடுநின்று உசாவி உரியவர்கள் தீர்ப் பளித்தால், குறிப்பிட்ட எழுபதின்மரில் பலர் தோல்வி யடைந்ததாக ஏற்படுமென்று கூறி வழக்குமன்றத் திலும் தேர்தல் ஆணையாளரிடமும் விண்ணப்பிக்கப் பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இவை ஒருபுறமிருக்க, உத்தரப்பிரதேசத்தில் நடை பெற்ற ஒரு தேர்தல் பெரிதும் ஐயப்பாட்டிற்கிடமாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

அதாவது, கோண்டா என்ற தொகுதியில், ஒரு காங்கிரஸ்காரரும், ஒரு சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த வரும் போட்டியிட்டதாகவும், அவர்களில் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த டண்டேகார் (முன்னுள் ஐ. சி, எஸ், அதிகாரி) 1600-ஓட்டுகள் அதிகம்பெற்று வெற்றி யடைந்ததாகவும், அவரோடு போட்டியிட்ட காங்கிரசுக் காரரான இராம் இரத்தின குப்தா என்பவர் தோற்று விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

தோற்ற காங்கிரசுக்காரர் தம்முடைய தோல்வி கண்டு வெகுண்டு, மீண்டும் ஓட்டுக்களை எண்ண வேண்டுமென்று விண்ணப்பிக்கவே, அப்படி எண்ணப் பட்டபோது, காங்கிரஸ் வேட்பாளர் 500 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுவிட்டதாக அறிவிக்கப் பட்டது.

இந்த விசித்திர நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்று கேட்கப்பட்டதற்கு, சுதந்திராக் கட்சி வேட்பாளருக்குக் கிடைத்த ஓட்டுக்களில் 1200 ஓட்டுக் கள் செல்லாதவை என்று கண்டுபிடிக்கப்பட்டதாம்.

முதல் எண்ணிக்கையில் செல்லுபடியான ஓட்டுக் கள் மறு எண்ணிக்கையில் எப்படிச்செல்லுபடியாகாது போயினவென்பதை விசாரித்துக் கண்டறியவேண்டும் என்று கருதிய தேர்தல் அதிகாரி, டில்லிக்கு இதுபற்றிய ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிருர். அதன்பேரில், தேர்தல் ஆணையாளர் உடனே புறப்பட்டு இலட்சுமண புரிக்குச் சென்று அத் தேர்தலிலுள்ள விநோதங்கள் பற்றி அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துபேசி, மேலும் அது குறித்துச் சரியான விசாரணை நடத்தியாக வேண்டுமென்ற முடிவோடு தேர்தல் நடைபெற்ற தொகுதியாகிய கோண்டாவுக்குச் சென்றிருக்கிருர்.

இதனை அறிந்த காங்கிரஸ் வேட்பாளர் உடனே அட்வகேட் ஜெனரலை அணுகி முறையிடவே, அவர் உயர் நீதிபதி ஒருவரின் வீட்டுக்குச் சென்று மேற் குறித்த விசாரணையைத் தடுக்கும் முறையில் உத்தரவு பெற்றுவிட்டார்.

எனவே, மேலே குறிப்பிட்ட தேர்தலில் எந்த அள வுக்கு ஒழுங்கீனங்களும், முறைகேடுகளும், நியாயமற்ற போக்குகளும் கையாளப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்கும் எவரும் நடந்துமுடிந்த தேர்தல் நாணயமான முறையில் நடைபெறவில்லை என்பதை ஒப்புக்கொண்டே தீருவர்.

என்றபோதிலும் காங்கிரசுக்காரர்கள் இந்த உண் மைகளை எல்லாம் உணரவோ, ஒப்புக்கொள்ளவோ முடியாதபடி பதவி வெறி பிடித்தாடிக்கொண்டிருக் கின்றனர்.

தில்லுமுல்லுகளால் வெற்றிக்கொடி நாட்டுவது என்பது எப்போதைக்கும் நிலையான ஒன்று அல்ல என்பதை வெற்றிப்போதையில் மயங்கிக் கிடப்பவர்கள் உணர்தல்வேண்டும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

இனிச் சிந்தித்து நடந்துகொள்ள வேண்டியது நீ! அதுகூட உன் விருப்பம் எப்படியோ அப்படிச் செய்யலாம்! நன்றியோடு நடந்து கொள்ளவேண்டுமா, வேண்டுவதில்லையா என்று நன்ருக நினைத்துப் பார். நன்றியோடு நடந்துதான் ஆக வேண்டுமென்பது உன் சிந்தையின் முடிவாகிவிட்டால், நாங்கள் சொல்வதற்குக் கட்டுப்பட்டு அப்படியே நடந்துகொள். இல்லை, அது தேவையில்லையென்ருல், உன் விருப்பம் எப்படியோ அப்படிச்செய்! ஆனுல் இப்போ நான் உன்னை ஏன் திரும்பவும் நிறுத்திப்பேசறேன் தெரியுமா? –'இதோ சொல்றேன், இதோ சொல்றேன்' என்று நீ காலத்தைக் கடத்திக்கொண்டு போய்விடக்கூடாது! அது ஒருபுறமிருக்க, இன்னெரு முக்கியமான விஷயம். நீ வந்து எங்களிடம் பதில்சொல்லப்போகும் காலம் மட்டும் நாங்கள் என்னசொல்லிக் கோரிக்கை விடுத்திருக்கின்ருேமோ அந்தக் கோரிக்கையின்படிதான் நடந்துகொள்ளவேண்டும்! — அதாவது எங்கள் கோரிக்கையின்படியே நடந்துகொள்கிறேன் என்ருே அதன்படி நடந்துகொள்ள முடியாது என்ருே நீ எங்களிடம் வந்து சொல்கின்ற வரைக்கும் நீ வாசுவிடம் பேசக்கூடாது! அவன் பழகும் எந்த இடத்திற்கும் நீ போகக் கூடாது!''

கடைசி வாக்கியங்கள் இரண்டையும் அழுத்தம் திருத்தமாக அவர் சொன்ன முறையே, கார்த்தி அந்த நிபந்தனைக்குக் கட்டுப்படமுடியாது என்று சொன்னுலும் அவனை அதில் பிடித்துப் பிணித்து அழுத்துவது போல் அமைந்தது.

கார்த்தியால் மேலே பேச முடியவில்லை. 'சரி' என்று சொல்ல முடியவில்லை; முடியாது என்று மறுக்க முடியவில்லை. மெல்லக் கைகுவித்துவிட்டு வெளியேறினுன் அவன்.

''பயல் பயந்தவன்; நியாயத்துக் கட்டுப்பட்டவன்; இனிமேல் அவன் நம்மைவந்து பார்த்தாலும் சரி, பார்க்காவிட்டாலும் சரி சொன்ன வார்த்தையை மீறமாட்டான். இவனுல் நமக்கு ஏற்படவிருந்த தொந்தரவு ஒழிந்தது. என்று நாம் அமைதி பெறலாம்'' என்று முருகேசனுரிடம் மற்றவர்கூற இருவரும் கெக்கொலி கொட்டிச் சிரித்துக்கொண்டனர்.

*

## 6. சுமந்தது பழியா? சுமத்தப்பட்டதுஅதுவா?

வெளியேறி வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த கார்த்திகேயன் தன் கடந்த காலத்தைத் திரும்பப் பார்த்துக்கொண்டே சென்ருன். முருகேசனுரைப் போன்ற பெரிய மனிதர்கள் தன்னைப்போன்ற ஏழைகளுக்குச் செய்கின்ற உதவி எந்த நோக்கத்தோடு, எப்படிப்பட்ட எண்ணத்தோடு செய்யப்படுகின்றது என்பதை அவன் நினைத்துப் பார்த்தபோது, அழவும் மாட்டாமல், அமைதி பெறவும் மாட்டாமல் பெருந் தவிப்புக்குள்ளானுன். இப்போது அவன், தான் முருகேசனுரின் அடிமையாக, எந்தவித உரிமையும் இல்லாமல் உழல்வதாகவே எண்ணிக் கொண்டான். ஆமாம், அந்த நிலைக் குத்தானே அவன் தள்ளப்பட்டிருக்கிருன்! 'முன்பின் யோசியாமல் முருகேசனுர் நல்கிய உதவியைப் பெற்றுக் கொண்டது எவ்வளவு பெரிய தவருக முடிந்துவிட்டது! மனச்சான்றையே ஒதுக்கி வைத்துவிட்டு நடக்கும்படி செய்துவிட்டார்களே உதவி செய்தவர்கள்! ஐயோ, உதவி செய்ய முன் வந்தவர்கள். எப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்துகொள்ளாமல், அவர்களின் உதவியை ஏற்றுக்கொண்டது எவ்வளவுபெரிய இடரை ஏற்படுத்திவிட்டது! என்ன செய்வேன் நான் இதற்கு?' என்று வருந்தித் தவித்து உள்ளுக்குள் புலம்பியவாறு நடந்தான் அவன்.

*

வீட்டை அடைந்த கார்த்தி வெளியிலேயே கிளம்பவில்லை. வீட்டுக்குள் அடைபட்டுக்கொண்டு கிடந்தான். யாரையும் பார்க்கவில்லை. யார் யாரோ அவனைத் தேடிக்கொண்டு வீட்டுக்கு வரத்தான் செய்தார்கள். அப்படி வந்தவர்களில் வாசு ஒருவன். முருகேசனுர் ஒருவர். அவர்கள் இரண்டுபேரையும்கூட வெளியில் வந்து அவன் பார்க்கவில்லை. கடன் கொடுத்தவர்களுக்கு அஞ்சி ஒதுங்கி வீட்டில் அடைபட்டு ஒளிந்துகொண்டு கிடக்கும் பெருங் கடனுளி ஒருவனைப்போல்—வீட்டுக்குள் இருந்துகொண்டே — வீட்டில் இல்லை என்று மற்றவர்கள் மூலம் சொல்லிச் சொல்லித், தன்னைப் பார்க்க வந்தவர்களைத் திருப்பி அனுப்பினுன்.

எத்தனை நாள்தான் இப்படி ஒளிந்துகொண்டிருக்க முடியும்! அலுவலகத்துக்குப்போகாமலிருக்க முடியுமா? சரியாகப் பத்து நாட்களுக்குப் பிறகு வெளியே வந்தான்

(12-ம் பக்கம் பார்க்க)

சித்திரை முதல் நாளில் வெளிவருகிறது!

# போர்க்குரல்

(வார ஏடு)

ஆசிரியர்: புலவர் ஆ. பெ. இளஞ்செழியன்

தனி இதழ் 13 புதுக்காசு

ஆண்டுத் தொகை ரூ. 7 அரை ஆண்டு ரூ. 4

விற்பனையாளர்கள் இதழ் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் முன்பணம் கட்டி விண்ணப்பிக்கவும்.

விவரங்கட்கு:-
'போர்க்குரல்'
செல்வ நிலையம்
53, சிங்காரத் தோப்பு, திருச்சி-8.

# போதும் உன் ஆட்சி

—[கார்மேகம்]—

செழுமை மிகுந்த திராவிட நாட்டிலே, மக்கள் சமாதானமாக வாழ்ந்த நாட்டில், இன்று குருதியும் கண்ணீரும் கரை புரண்டோடுகிறது. எங்கு நோக்கினும் பசி..... பஞ்சம்......அறியாமை.....வறுமை. நம்முன் காண்பது, உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி,எலும்பும் தோலுமாய், உயிர் ஊசலாடும் ஒரு மனித உருவம்......மனிதன் என்று சொல்லமுடியாது......அது உருவம்தான்......அவன்தான் திராவிடன். அவனுக்கு வாழ இடம் கிடையாது. இவ்வளவு பெரிய நாட்டிலே—நீர்வளம் நிலவளம் நிரம்பிய நாட்டிலே அவனுக்கு உண்ண உணவு கிடையாது...ஏன்? அவன் உரிமையோடு வாழவும் வழி இல்லை.

திராவிடத்தின் அதாவது தென்னாட்டின் நலனுக்காகவே தாங்கள் ஆளுவதாகச்சனநாயகமுறையைக் காட்டிப் பறைசாற்றுகிறார்கள் காங்கிரசின் ஆட்சியாளர்கள். காங்கிரசாரின் கடந்த பதினைந்து ஆண்டுகள் ஆட்சியிலே சாதித்தது என்ன? என்ன கண்டோம்? அல்லற் பட்டு வடவர் ஆட்சியிடம் அடிமைப் பட்டு அவதிப்படும் காலம் இன்று நேர்ந்துவிட்டது.

காங்கிரசாரின் ஆட்சியில் பலன் என்ன கண்டோம்? பட்டினியால் மக்கள், மடிவதைத்தான் கண்டோம். படித்தான் வேலையில்லை, எனவே தற்கொலை செய்துக்கொண்டான். கற்பழிக்கப்பட்டாள், தற்கொலை செய்துகொண்டாள், எங்கு நோக்கினும் இந்தக் குரல்கள்தான், இதைவிட வேறு என்ன கண்டுவிட்டோம். நாட்டாசை பிடித்த காங்கிரசார் விரித்த வலையில் நாம் சிக்கிவிட்டோம். தென்னாட்டின் சுபீட்சம் அதிலுள்ள கிராமங்களைப் பொறுத்தது. திராவிடரில் 100க்கு 67 பேர் கிராமவாசிகள். அவர்கள் விவசாயத்தை முக்கியமாக நம்பி வாழ்கிறார்கள். இன்று அக்கிராம வாசிகளின் வாழ்வு சீர்குலைந்துவிட்டது. பணமூட்டைகளிடம் சிக்கி அவர்கள் அவதிப்படுகிறார்கள். இந்நிலைமையில் பல கோடிக்கணக்கான ரூபாய்க்குமேல் கடன் என்று சொல்லப்படுகிறது. திட்டமும் அதை நமக்குத் தெரிவிக்கிறது. இக்கடனும் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது.

வெள்ளையன் கடனை அடைத்து விட்டு, இந்தியாவுக்கு பணம் மிகுதி வைத்துச் சென்றான் என்று சொல்கிறார்கள். என்ன ஆயிற்று அப்பணம்? எப்படிக் கடன் ஏறியது? ஏன் ஏறியது? ஏறியது உண்மை என்றாலும், அப்பணத்தின் செலவு பெரும்பாலும் வடக்கே செலவிடப் படுகிறது.

பாடுபடத் தயாராக இருந்தும், திராவிட நாட்டில் உள்ளவர்களில் பெரும்பாலோர் இன்று வேலை இன்றி வேதனைப்படும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. மனிதன் மனிதனைச் சுமந்து, மழையிலும் வெய்யிலிலும் அடிபட்டு அவதிப்பட்டு மக்கள் மடிவதை நாம் இன்று கண்கூடாகக் காண்கின்றோம். ஆட்சியாளரும் மறுக்க முடியாது.

படித்த வாலிபர்களும் படித்த பெண்மணிகளும் வேலை கிடைக்காத காரணத்தால் பாழ்கிணறுகளிலும், மரங்களிலும் தற்கொலை செய்து கொண்டதாக அரசாங்கத்தின் மரணபுள்ளியும், பத்திரிகைகளும் நமக்குத் தெள்ளத்தெளிய விளக்குகின்றன.

வெளியில் உள்ள எல்லா நாடுகளிலும் மொத்தம் 3 கோடி பேர் வேலை இல்லாமல் இருப்பதாகச் சர்வதேச சங்கம் மதிப்பிட்டுள்ளது. ஆனால் இந்தியாவில் மட்டும் 5 கோடி பேர் வேலை இல்லாமல் கிராமங்களை விட்டு நகரங்களுக்குச் சென்று, பெண்டுபிள்ளைகளுடன் பல இழி தொழில்கள் செய்து, உண்ண உணவின்றி, படுக்க இடமின்றி, உடுக்க உடையின்றி, சாலை ஓரங்களில் மிருகங்களைப்போல், அவற்றினும் கேவலமான நிலையில் அல்லற் படுபவர்களையும் நாம் பார்க்கிறோம். இந்நிலை ஆட்சியாளருக்கும் தெரியும். இந்தியாவிலுள்ள இந்த 5 கோடி பேர்களில் நம் தென்னகத்தில் மட்டும் முக்கால் பாகம் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

வடநாடு வாழ்கிறது. தென்னகம் தேய்கிறது என்றால், இதை அடுக்கு மொழி என்று துடுக்குத் தனமாகச் சொல்கிறார்கள் பேசத் தெரியாதவர்கள். தென்னாடும் வாழ்கிறது என்கிறார்கள் உண்மைதான்.

வேலையில்லாமல் மக்கள் அதிகமாக வாடுகிறார்கள்.

நமது தென்னகத்தின் நீர் வளத்தை உலகமறியும். ஆனால் இந்த அரசாங்கம் அதை நன்கு பயன்படுத்தவில்லை. வேண்டிய அணைகள் கட்டவில்லை. வடநாட்டிலே அணைத் திட்டங்கள் இல்லாத இடமே இல்லை. இதை நமக்குக் காட்டும் செய்திப் படம் ஒன்றே போதும். 100 அணைகளின் படத்தைக் காட்டினால் அதில் நம் தென்னகத்தின் அணைகள் 10. மீதி அத்தனையும் வடக்கே. அங்கே கோடிக்கணக்கான ரூபாய் செலவு. இங்கே இலட்சக் கணக்கான ரூபாய் செலவு. வடக்கேயுள்ள நீர்ப்பாசனத்தையும் இங்கிருந்து காட்டும் நீர்ப்பாசனத்தையும் செய்திப் படங்களின் மூலம் மக்கள் நன்கு உணர்ந்துவிட்டார்கள். இனியும் இந்நிலை நீடிக்கவிட மாட்டார்கள்.

நமக்கு இயற்கையின் துணை நன்றாகத்தான் அமைந்திருக்கிறது. அதை பயன்படுத்தி மக்களுக்கு அளிப்பது நல்ல அரசாங்கத்தின் கடமை. இந்த ஆட்சியால் இது முடியவில்லை. முடியாது.

நமது தென்னாட்டில் அதிகப்படியான காடுகள் இருந்தும், இதை நம் அரசாங்கம் நன்கு பயன்படுத்தவில்லை. இக்காடுகளின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமான சரக்குகளை அரசாங்கம் பெறுகிறது. பெற்றதை மக்களுக்கும், காடுவளர்ப்புத்திட்டத்திற்கும் போதிய வசதி செய்துதர இந்த ஆட்சியாளரால் முடியவில்லை.

இதேபோன்று காவிரியில் எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடித்து விஞ்ஞானிகள்கூறிப் பலஆண்டுகள் ஆகியும், இந்த ஆட்சியாளர்கள் எந்தவித அக்கரையும் எடுத்துக் கொள்ளவில்லை இதுவரையில்.

எஸ். எஸ். எல். சி. படித்த பலர் சிமெண்ட் மூட்டைகளைச் சுமந்தும், கம்பிகளை சுமந்தும், தண்ணீர் எடுத்தும் கொட்டுகிறார்கள். இவர்களின் படிப்பின் தரத்தை எடுத்துக்கூறிச் சிறு உத்தியோகம் கேட்கிறார்கள். தம் படிப்பின் தரத்துக்குத் தகுந்தவாறு வேலை கிடைக்காமையால் அவர்கள் வாழ்வு சீர்குலைந்து, தற்கொலைக்கும் முயற்சி செய்கிறார்கள்.

வடக்கே எதற்கெடுத்தாலும் திட்டம் இருக்கிறது. இங்கே என்ன இருக்கிறது? 1500 ரூபாய் சம்பளம் வாங்கும் அதிகாரிகள் இருக்கிறார்கள். உரிமை இல்லாத ஊமை மந்திரிகள் இருக்கிறார்கள். அவ்வளவுதான். மக்கள் இனியும் ஊமைகளாக இருக்கமாட்டார்கள். சேலத்தில் இரும்பு, காவேரியில் எண்ணெய்,இன்னும் கண்ணாடி பீங்கான், அலுமினியம் போன்ற கனிப்பொருள்கள் ஏராளமாக நம் திராவிட நாட்டில் இருந்தும் அவைகளைப் பயன்படுத்த நம் ஆட்சியாளரிடத்தில் திட்டமும் திறமையும் இல்லை.

செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்
(பொதுமறை)

செய்யத் தகாதனவற்றைச் செய்தாலும், செய்யத்தக்கவற்றைச் செய்யாமையினாலும் அரசு கெடும்; என்ற நம் வள்ளுவனாரின் மெய்ப்பொருளை ஏன் இந்த ஆட்சியாளர் உணரவில்லை. அல்லது படித்ததில்லையா? கற்றிருந்தால் அதன்படி நிற்கவேண்டாமா?

நம் தென்னகத்தின் வறுமைக்குக் காரணமென்ன? இங்கு உற்பத்தியாகும் பொருள்கள் போதுமானதாக இல்லை. விவசாயத்தை மட்டுமே நம்பி மக்கள் வாழவேண்டி இருக்கிறது. மக்களின் வருவாயை அதிகரிக்ககூடிய உப கைத்தொழில்கள் அரசாங்கத்தாரால் உதாசினம் செய்யப்படுகின்றன. கைத்தொழில்கள் திட்டமிட்டுச் செய்யப்படவில்லை. அவற்றில் போதிய பயிற்சியும் மக்களுக்கு அளிக்கப்படவில்லை.பொருள் உற்பத்திக் குறைவிற்கு இவைகளே முக்கிய காரணமாகும்.

பொருளாதார வாய்ப்பைக் கட்டுப்படுத்தி நிர்வகிக்கும் அரசாங்கத்தின் கொள்கையோ மிகவும் பிற்போக்காக இருக்கிறது.தொழில் பிரச்சினைகளைச் சமாளிக்க அரசாங்கம் முற்போக்கான கொள்கைகளை ஏற்று நடத்தவில்லை. மக்கள் பெரும்பாலோர் அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றனர்.மக்கள் முன்னேறும் பாதைக்கு அரசாங்கம் தடையாகத் தான் இருக்கிறதே தவிர, வழிகாட்டியாக இல்லை. ஆங்கிலேயர் ஆட்சியில் 1946ல் படி அரிசி 9 அணா விற்றது. சுதந்திரம் அடைந்து காங்கிரஸ் ஆட்சியில் இப்போது 1962ல் 1 படி அரிசி 1—4—0 (1-25 N. P.) 1945ல் ஒரு ஏக்கருக்கு வரிப்பணம் சுமார் 6 ரூ. 1962ல் 1 ஏக்கருக்கு சுமார் 12 ரூ. இதை நாம் நன்கு உணரவேண்டும்.

தென்னாட்டின் நிலப்பரப்புக்கும், நீர்வளத்துக்கும மூலப் பொருள்களின் வசதிக்கும், காலப்போக்கில் பெருகும் சனத்தொகைக்கு தக்கவாறும், கைத்தொழில் அபிவிருத்தி அடையச் செய்யவில்லை இந்த அரசாங்கம்.

“ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் சொந்த மொழி, பண்பாடு இவைகளைப் பேணி வளர்க்க உரிமையுண்டு” இது அரசாங்க அடிப்படை உரிமைகளில் ஒன்று. சனநாயக முறையில் ஆட்சி செய்யும் இவர்கள் சர்வாதிகாரத்தின் பேரில் நமக்குப் புகுத்துவதின் நோக்கமென்ன?

வடநாட்டில் பருத்தி ஆலைகள்; பம்பாய், ஆமதாபாத், ஷோலாப்பூர், கான்பூர்.

தென்னாட்டில் பருத்தி ஆலைகள்; மதுரை, கோயமுத்தூர், ஓரளவு தூத்துக்குடி.

வடநாட்டில் இரும்புத் தொழிற்சாலை ஒரிசாமாநிலத்தில் ரூர்கேலா, மத்யப்பிரதேச மாநிலத்தில் பிலாய், மேற்கு வங்காள மாநிலத்தில் துர்க்காபூர்.

தென்னாட்டில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றுகூட இல்லை.

காகித ஆலைகள் பெரும்பாலும் வடக்கே உள்ள வங்காள மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளன. நம் திராவிடநாட்டில் மூச்சுவிடக்கூடாது.

கண்ணாடித் தொழிற்சாலை வடநாட்டில்,

| | |
|---|---|
| மேற்கு வங்காளத்தில் | 34 |
| பம்பாயில் | 32 |
| உத்தரப்பிரதேசத்தில் | 24 |

கண்ணாடித் தொழிற்சாலை நம் தென்னாட்டில் சென்னையில் 10.

மேற்கண்ட புள்ளி விவரங்களில் இருந்து நம் தென்னகம் வஞ்சிக்கப்படுகிறது என்பதை நமக்குத் தெள்ளத்தெளிய நன்கு விளக்குகின்றது. இப்படியும் ஓரவஞ்சனை ஆட்சி செய்யலாமா? இதை நீடிக்கத்தான் விடலாமா. இதை மக்களும் புரிந்து கொண்டார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

தென்னாட்டின்மீது வடவர் ஆதிக்கம் செலுத்துவதென்பது இனி முடியாது. திராவிடநாடு ஒன்று சேர்ந்து எதிர்க்குமேயானால் வடவரின்எந்தச் சக்தியும் அதைச் சமாளிக்க முடியாது. நிலவளம், நீர்வளம், கனிப்பொருள்கள் நிறைந்த தென்னகத்தை வேறு எந்த நாட்டின் உதவியின்றி வடஆதிக்கத்தைஇங்கிருந்து ஓட்டமுடியும்.

தென்னகத்தின் செல்வத்தை எல்லாம் சூறையாடிச் சென்று திராவிட நாட்டை பஞ்சக்காடாக மாற்றி, அதன் மக்களை வறுமையிலே வீழ்த்தி, அறியாமையிலே ஆழ்த்தி அடக்குமுறை எனுங் ஆயுதங்கொண்டு ஆட்சி செலுத்தும் அழகைஅனுபவித்ததுபோதும். ஓரவஞ்சனை செய்வதுதான் நாகரிகம் என்றால் அந்த நாகரிகம் நமக்குத் தேவையில்லை.

வளமிகுந்த தென்னகத்தை சுடுகாடாக்கித், திராவிட மக்கள் பாடுபட்டு உழுது பயிரிட்டுக்கொண்டு வந்த உணவுப்பொருள்களைவரியின் பெயரால் சூறையாடப்பட்டு உண்டு கொழுக்கும் சர்வாதிகார ஆட்சி இனியும் நமக்குத் தேவையில்லை; போதும் உன் ஆட்சி.

★

15-வது இதழ் விற்பனையாகிறது!

படித்தீர்களா?
தி.மு.க. வார ஏடு
முன்னேற்றம்
ஆசிரியர்: டி.டி.அரசு
விலை 13 காசு
முன்னேற்றம் — சென்னை-2

# பரிசு ★

**கல்லைப்பித்தன்**

அதோ தெருவிலே, காஞ்சிபுரம் சேலையும். குண்டாஞ்சி சேலையும் விக்குது! என்னையும் கட்டிக்கிட்டு வருசம் மூணுச்சே? ஒரு நல்ல நாளு......கெட்ட நாளு உண்டா? இந்தப் புதுவருடப் பிறப்புக்காவது எனக்கும் மருதாயிக்கும் புதுத்துணி ஏதாச்சும் எடுத்துத் தாங்க......!

கஞ்சியைக் குடித்துவிட்டு வாயையும், கையையும் கழுவிக்கொண்ட நல்லமுத்து, பக்கத்திலிருந்த கிழிந்த பாயை இழுத்துவிட்டு அதில் சுருண்டு படுத்துக்கொண்டான்.

"இன்னைக்கி ஏதாவது பலகாரம் கிலகாரம் செய்யணும் அத்தான்..." என்று சொன்னவள், அவனிடமிருந்து பதில் ஏதும் வராததைக் கண்டு, திரும்பி அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

"அதெல்லாம் விட்டுடு அஞ்சலை, பலகாரமும் கிடையாது, ஒண்ணும் கிடையாது. என்னைக்கும்போல் கஞ்சிதான், கூழுதான். ஆனு ஒண்ணு; நம்ம எசமான் வேலைக்காரங்களுக்கெல்லாம் புதுவருடப் பரிசாக்க கொஞ்சம் பணமும், துணிமணியும் கொடுப்பார்போலத் தோணுது......"

"நமக்குக்கூடவா...?"

"ஆமா அஞ்சலை. வேலைக்காரங்க அத்தனை பேருக்குந்தான்; அதுவும் இல்லாம,இன்னிக்கி சாயங்காலமா.. ...நம்ம எசமான் வீடு அமர்க்களப் படப்போவுது, அஞ்சலை....." ஏதோ பேரானந்தத்துடன் கூறினுன் அவன்.

"என்னுது அத்தான்..? விளக்கமா சொல்லேன்..." ஏதோ ஒரு பெரும் புதையலே வரப்போகிற பூரிப்போடு வினவினுள் அவள்.

"அட! அஞ்சலை, புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு ஊரிலே உள்ள பெரிய மனுசங்க அத்தனை பேரையும் வரவழைச்சி விருந்து கொடுக்கப் போருரு நம்ம எசமான்! நம்ம எசமான் வீட்டிலே பண்டிகையானுலும், விருந்துவைபோகமுன்னுலும், அது நம்ம வீட்டிலே நடக்கிற மாதிரிதானே அஞ்சலை? நமக்கும் மிச்சம் மீதியெல்லாம் நிறையக் கிடைக்கும். நம் வீட்டுப் புதுவருடப் பிறப்பு அதிலேதான் ஓடணும்......"

"துணிமணி கூடவா அத்தான் கிடைக்கும்......?"

"ஆமா! ஆமா! ஆமா! சரி...நான் போயிட்டு வர்ரேன். ஏகப்பட்ட வேலைங்க கிடக்குது......வரட்டுமா அஞ்சலை....." துள்ளியெழுந்தவன் கதவின்மேல் கிடந்த துண்டை எடுத்துத் தலையில் கட்டிக்கொண்டு குனிந்து வெளியே போய்விட்டான்.

அஞ்சலை ஆயிரமாயிரம் கனவுகளில் மிதக்கத் தொடங்கினுள். நம்ம கணவன் புதுத்துணி வாங்கி வருவார், என்று பலப்பல முறை நினைத்து நினைத்துப் பார்த்தபோதே, அவள் மேலெல்லாம் ஒரே உணர்ச்சியோட்டமெடுத்தன. நீண்ட நாளைய ஆசையின், கிளு கிளுப்புத் தன் மேனியெல்லாம் பட்டுத் துணியும், பலநிறச் சேலைகளும் கிடப்பதைப் போல அவளுக்கு ஒரு எண்ணம். அந்த எண்ணத்தின் இன்பக் கூடத்தில் மேலும் ஒரு ஆயிரம் படி உயர்ந்தது. வீடெல்லாம் விதவிதமான பலகாரங்கள், கமகமவென்று வாசனை பரப்பிக்கொண்டிருந்தன. அவளுடைய சுவையையே காணுத நரம்பற்றுப்போன நாவில் சிலுசிலுவென்று ஊற்றுப் பிறந்தது. கூழும் கஞ்சியுமே உண்டு உண்டு சன்னி கண்டுப்போயிருந்த அவளுடைய வயிறு சற்று அகலமாக மலர்ந்தது!

அப்போது, பறந்த தலையும் பல கண்களுடைய ஆடையும் உடைய ஒரு குழந்தை குடிசையினுள் ஓடி வந்தது.

"அம்மா...அம்மா...அ....ம்....மா ...ஆ..." மண்ணேடு பதிந்துவிட்ட பதுமையைப்போல் தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அஞ்சலை, கைகள் இரண்டையும் நீட்டி, 'ஓடியா மருதாயி...ஓடியா...' என்ருள்.

ஆவலுடனும் ஆனந்தத்துடனும் ஓடிவந்த மருதாயி, சட்டென்று முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு, எதிரியைப்போல் முறைப்புடன் நின்றுவிட்டாள்.

"ஏய்..மருதாயி? நின்னுக்கிட்டே? ஓடியா..என் மடியிலே...சாஞ்சிக்கடி ...ஓடியா......"

"வேண்டாம் போ..."

"ஏன் மருதாயி...?"

"ஆமா... ஊரெல்லாம் இன்னிக்கி புதுவருடப் பண்டிகைன்னு கொண்டாடுராங்களே...? அது நமக்கும் இல்லியா? எனக்கு நீ மட்டும் ஏன் திங்கிற பண்டம் செஞ்சுதரல்லே?"

"அடி இராசாத்தி! இதுக்காகவா கோவிச்சுக்கிட்டே? போகட்டும் விடு. இன்னிக்கி நம்ம எசமான் வீட்டிலே ஏக அமர்க்களமான பண்டிகையாம்! உங்கப்பா........ உனக்குப்புதுத்துணியும் புதுவருடப் பலகாரமும் நிறையக் கொண்டாருவாரு மருதாயி; இப்பதான் சொல்லிட்டுப் போனுரு; நீ அழுவாதே மருதாயி... வா... நீ சாயங்காலம் நம்ம குடிசைக்கும் முன்னுலே நின்னுக்கிட்டு எசமான் வீட்டைப் பார்த்துக்கிட்டேயிருந்தீன்னு, எல்லாத்தையும் நீயே தெரிஞ்சுக்குவே... வா... மருதாயி... என் கண்ணுல்லே..."

*

மாலை நேரம்!

அந்தப் பங்களா சொர்க்கபோகமாகக் கிடந்தது. அதன் முன் பலப்பல கார்கள் வந்து வந்து நின்ற வண்ணமிருந்தன.

எடுபிடி ஆட்களை விரட்டு விரட்டென்று விரட்டிக்கொண்டிருந்த சாந்தலிங்கம் பிள்ளையவர்கள், வினுடிக்கொரு முறையாக வாசலுக்கு வந்து, கழுத்தில் கிடந்த சரிகை உருமாலைச் சரிசெய்து கொண்டு வரவேற்புக் கொடுத்தபடி இருந்தார்.

மாடியில் நிலாமுற்றத்தில் வண்ண வண்ண விளக்குகள், கண்திறந்து ஒளிபரப்பத் தொடங்கியதும், விருந்தினர்கள் வந்து வரிசை வரிசையாக அமரத் தொடங்கினுர்கள். பரிமாறவும் தொடங்கிவிட்டதை உணவு வகைகளின் மணமும், பாத்திரங்களின் சிறு சிறு உரசலும் இனிமையாக அறிவிக்கத் தொடங்கின.

கீழே பங்களாவின் நடு முற்றத்தில் உணவுக்குப்பின், விருந்தினர்கள் வந்தமர்வதற்காக ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான் நல்லமுத்து. அடிக்கொருதரமாக மருதாயியையும், அஞ்சலையையும்

நினைத்துக்கொண்டிருந்த அவன்; வல்லமையுடன் மூச்சைப் பிடித்துக் கொண்டு பொறுமையோடு இருந் தான்.

சட்டென்று மேல் மாடியிலிருந்து அவனை, 'நல்லமுத்து நல்லமுத்து'– என்று சாந்தலிங்கம் பிள்ளை அழைத் தார். கையில் எடுத்த மேசை விரிப்பை அப்படியே போட்டுவிட்டுப் படியேறி ஓடினான். படிகளின் முகப் பில் சாந்தலிங்கம் பிள்ளை கடுகடுப் புடன் நின்றுகொண்டிருந்தார். அவ ருடைய தீயுமிழ் கண்களும், திருகி விட்ட மீசையும் உலகத்தையே நாசப்படுத்திவிடுமளவிற்குத் துடி துடித்துக்கொண்டிருந்தன.

"அட... தடிக்கழுதை...... குரல் கொடுத்து அரைமணி நேரமா என் னடா செய்தே...?" கர்ச்சனையுடன் கையிலிருந்த பிரம்பினால் அவன் தலையில் ஓங்கியடித்தார். மேலே ஓடிவந்த வேகத்தில் அதனைச் சமா ளிக்க முடியாத நல்லமுத்து, சட் டென்று பின்வாங்கியபடிதிரும்பவே, கால் வழுக்கிப் படிகளில் தலைகுப்புற விழுந்து கடகடவென்று உருண் டான். அதனைக்கண்டு பதருத— துடிக்காத சாந்தலிங்கம் பிள்ளை விசுக்கென்று அங்கிருந்து போய் விட்டார்.

அதன் பிறகு மாடிக்கு வேக வேக மாக ஏறி இறங்கிக்கொண்டிருந்த வேலைக்காரர்களில் ஒருவருக்குக் கூட நல்லமுத்து கடைசிப்படியில் இரத்த ஓடையில் கிடப்பது தெரிய வில்லை.

நீண்ட நேரத்திற்குப் பிறகு மேலே போகவந்த ஒருவன்; தன் காலடியில் யாரோ ஒருவனின் உடல் இடறு வதைக் கண்டு, கையில் இருந்த தட்டினைப் படியில் வைத்துவிட்டுப், பதட்டத்துடன் குனிந்து பார்த்தான். பிறகு அவனைத் தூக்கி நிமிர்த்திய வன் பீதியடைந்தான்.

"ஐயோ... நல்லான், நீயாடா? என்னடா இது, இரத்தக்கோலம்?" நல்லமுத்து நிற்கமுடியாமல் நினை விழந்து தள்ளாடினான். அவன் உதடுகள் பேசத்தான் துடித்தன.

"எவ்வளவு நேரமாடா இப்படி... படியிலே உருண்டு விழுந்து அடி பட்டுக்கிடக்கிறே? ஐயோ மண் டையே பிளந்துபோயிருக்கே? சரி... சரி... உன் வேலையையும் சேர்த்து நான் கவனிச்சுக்கிறேன் நீ மெதுவா வீட்டுக்குப்போய்ச்சேருடா...இங்கே யிருந்தின்னு, இதே நிலைமையிலே எசமான் உன்னைப்பார்க்க நேர்ந் தால், பிறகு இன்னும் விபரீதமா யிடும்... நீ மெதுவா வீட்டுக்குப் போய்ச் சேருடா நல்லான்" என்று கூறிவிட்டுத் தட்டினை எடுத்துக் கொண்டு மேலே போய்விட்டான் அவன்.

நல்லமுத்து மெதுவாக அடி யெடுத்து வைத்தான். பூமியின் பாதாளத்திற்கே சென்று பதிந்து விட்டதைப்போல அவனுடைய கால், அடுத்த அடி எடுத்துவைப்ப தற்கு ஒத்துவரவில்லை. மேலெல்லாம் வழிந்து உறைந்துவிட்டிருந்த குருதி காய்ந்துகிடந்தது.

வெளியில் தெருவில் எங்கோ காளைகளின் ஆனந்த ஓட்டமும், புது வருடப்பிறப்பின் மகிழ்ச்சிப் பெருமித முழக்கங்களும் கேட்டன. மாடியில் விருந்து மண்டபத்தில் ஒரே சிரிப்பும் பேச்சுமாக இருந்தது. அதிலிருந்து கரை புரண்டுகொண் டிருந்த பேரானந்தச் செல்வச் செருக்கு; அவனை மீண்டும் ஓர் முறை மலைச்சிகரத்திற்குக்கொண்டு போய்ப் பயங்கரமான சரிவில் உருட்டித் தள்ளிற்று. மெல்ல நடந்து வெளியே வந்தான்.

உலகத்தில் இருந்த உயிர், பொருள் அனைத்தையும் விழுங்கி விட்டிருந்த இருள், மூச்சுவிட முடி யாமல் திணறிக்கொண்டிருந்தது. அடிமேல் அடியெடுத்து வைத்து மெதுவாகச் சற்றுத்தூரம் நடந்து வந்து, தெருவின் எதிர்ப்புறமிருந்த அவனுடைய குடிசைக்கு முன்பு வந்தான்.

மெதுவாகக் குனிந்து குடிசை யின் உள்ளே நுழையப்போனவன், கனிவும் பற்றும் பாசமும் மிகுந்த அஞ்சலையின் பேச்சுக்குரல் கேட்டு, அப்படியே நின்று கூர்ந்து கேட் டான்.

"இராசாத்தி இல்லே? நான் சொன்னே......கேட்கமாட்டியா மரு தாயி? நம்ம எசமான் வீட்டிலே யிருந்து கண்டிப்பா உனக்குப் புதுத்துணியும் புதுவருடப் பலகார மும் அப்பா கொண்டாருவாரு; நீ இன்னிக்கு மட்டும் செத்தநேரம் முழிச்சிகிட்டு இரு—மருதாயி; மத்தி யானமே திங்கிற பண்டம், திங்கிற பண்டமுன்னு அடஞ்செஞ்சியே? செத்த நேரம் தூங்காம இரு மரு தாயி......எங்கே ஏந்திரு..."

வெளியில் நின்றுகொண்டிருந்த நல்லமுத்துவிற்குத் தன் உள்ளே துடித்துக்கொண்டிருந்த அரை குறையான உயிரும், விடை கொடுத்துவிடும்போல இருந்தது. வெளிப்பட்டுவிட்டதுபோக, அவன் உடலில் ஓடிக்கொண்டிருந்த மீத மிருந்த இரத்தமும் அப்படியே நின்று உறைந்துபோய்விடும்போல இருந்தது. அவன் நெஞ்சு முழுவதும் மண்டிக்கிடந்த இருளைவிட, அவன் குடிசையினுள்ளே இருட்டிலும் இருட்டுச் சூழ்ந்துகிடந்தது. மீண் டும் மீண்டும் அஞ்சலை, எதை யெதையோ கூறி, மருதாயியை விழிப்புக்கு அழைத்துக்கொண் டிருந்தாள்.

வெளியில் குடிசையின் முகப்பில் வெறுங்கையுடன் நின்றிருந்த நல்லானுக்கு, நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. அவன் கண் களுக்கடியில், கண்ணீரோ— மண்டையிலிருந்து வழிந்த இரத் தமோ இரண்டுதுளி வழிந்து படிந்த படி ஒட்டிக்கொண்டிருந்தது.

★

## இரா. தர்மலிங்கம் தாயார் மறைவு

டில்லி பாராளுமன்ற உறுப்பினர் இரா. தர்மலிங்கம் அவர்களின் தாயார் 12—4—62ல் இயற்கை எய்தினார்கள் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

துணைவியாரை இழந்த துயரம் மறைவதற்குள், அன்னை யாரின் இழப்பு மேலும் அதிர்ச்சியைத் தந்துவிட்டது. ஆறுத் துயரத்தால் கலங்கி நிற்கும் நண்பருக்கு நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம். —ஆசிரியர்.

# கண்ணீர்!

செல்வம்

ஓய்வு பெற்ற ஆசிரியர் முத்துமணி அந்தத் தாலுக்கா கச்சேரியில் நுழைந்தபோது மணி 2-30 அன்று 'பென்ஷன்' வாங்கும்தினம். கச்சேரியில் ஓரே கூட்டம். உள்ளே இருந்த கடிகாரத்தைப் பார்த்ததும் முத்துமணிக்கு மயக்கமே வரும்போலிருந்தது! எப்படியோ சமாளித்துக் கொண்டு பையிலிருந்த பென்ஷன் ஆர்டர் புத்தகத்தைச் சம்பந்தப் பட்ட எழுத்தரிடம் கொண்டுபோய் நீட்டினர். கணக்கற்ற காகிதக் கட்டுகளுக்கிடையே புதைந்திருந்த எழுத்தர் கனகோபத்தோடு முத்துமணியைப் பார்த்து "ஏன்ஐயா, உங்களுக்கெல்லாம் எத்தனைதரம் சொல்லுவது — ஒவ்வொரு தடவையும் பென்ஷன் வாங்க இரண்டு மணிக்குமேல் வருகிறீர்களே! நான் கணக்கை முடித்து உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டேன். மேலதிகாரியைப்போய்ப்பாருங்கள்" என்று பாடம் ஒப்புவிப்பதுபோல் கூறிவிட்டு மேலும் தன்னுடைய வேலையில் மூழ்கிவிட்டார். அதற்கு மேல் அந்த எழுத்தரிடம் பேசிப் பயனில்லை என்பதைக் கண்டு கொண்ட முத்துமணி சமயம் பார்த்து அந்த மேலதிகாரி அறைக்குள் நுழைந்து வணக்கம் செலுத்தினர்.

"என்னய்யா வேண்டும்?" பயங்கரமாக உறுமிக்கொண்டே வினவினர் அந்த அதிகாரி.

"ஒன்றுமில்லை...'.......பென்ஷன் வாங்கவேண்டும்;கொஞ்சம் லேட்டா வந்துட்டேன்...தயவு...பண்ணி..."

"ஓஹோ நீங்களெல்லாம் இரவு எட்டுமணி வரையில் வந்துகொண்டிருப்பீர்கள், அதுவரையில் பணப் பெட்டியை திறந்து வைத்துக் கொண்டு உங்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும்! இதென்ன ஆபீசா? அல்லது உங்கள் வீட்டு அடுப்பங்கரையா? போய்யா போ! அடுத்த மாதம் வா. இனிமேல் பென்ஷன் போடமுடியாது" கொஞ்சம்கூடத் தயங்காமல்வார்த்தைகளை வெகு வேகத்துடன் அள்ளி வீசினர் அந்தக் கடமைவாதி.

ஆசிரியரோ தீனமான குரலில் "ஐயா, ஐயா, அப்படிச் சொல்லாதீங்க...........வீட்டில் என் பெண் காய்ச்சலால் ரொம்பக்கஷ்டப்படுறு; அந்த வைத்தியத்துக்கு இந்தப் பணம் வந்துதான் ஐயா ஆகவேண்டியிருக்கு. கொஞ்சம் பெரியமனசு வையுங்க ஐயா" என்று கெஞ்சினர்.

அதிகாரியோ மிகுந்த கோபத்துடன் "ஏனய்யா நீர் என்ன மனிதன்தானு? நான் சொல்றது காதில் விழவில்லை! எந்த ஆபத்தானுலும் இனிமேல் இன்று பென்ஷன் போடமுடியாது — "டேய் ப்யூன்! இந்த ஆளைக் கொண்டுபோய் வெளியே விடு" என்று முழங்கினர். அதற்கு மேலும் அங்கு நிற்க மனமில்லாமல் மெல்ல வெளியேவந்தார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை! வீட்டிலோ அவருடைய ஆசைமகள் கடுமையான காய்ச்சலில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிருள். டாக்டரோ இரண்டு நாளைக்கு முன்பே அவசியம் ஊசிபோடவேண்டும் என்று கூறினர். கையில் பணமில்லாத காரணத்தால் பென்ஷன் வாங்கி வைத்தியம் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் கடந்த இரண்டு நாட்களாக ஓய்வு ஒழிவு இல்லாமல் மகளின் உயிரைக் காப்பாற்றக் காத்துக்கொண்டிருந்தார் அந்த ஏழை ஆசிரியர். கடந்த இரண்டு நாட்களும் அந்த ஆசிரியர் எண்ணம் போலவே அவருடைய மகளும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு குற்றுயிராய்க்கிடந்தாள். பென்ஷன் வாங்குவதற்காக அன்று காலையிலேயே எழுந்து குளித்துவிட்டு நகரத்திற்கு விரைந்தார். ஊரிலிருந்து நகரம் சரியாகப் பத்து மைல். பஸ்ஸில் போகலாமென்றுல் கையில் காசு இல்லை! எப்படியோ நடந்தே சென்றுவிடலாம் என்ற எண்ணத்தில் வெகு வேகமாக நடந்துவந்தார். வீட்டில் மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கும் மகளைக் காப்பாற்றியாக வேண்டுமென்ற துடிதுடிப்பில், அவர் தன்னுடைய வயதையும் மீறி நடந்தார். எப்படியோ துன்பப்பட்டு வெயிலையும் பொருட்படுத்தாமல் ஆறு மைல்களைத் தாண்டிவிட்டார். இடையில் ஒருசிற்றூர் அதைத்தாண்டிவிட்டால் நகரம் வந்துவிடும். கையில் பென்ஷனை வாங்கிவிட்டால் வரும்போது பஸ்ஸில் வந்துவிடலாம். முதல் நாள் மத்தியானம் கொஞ்சம் சாப்பிட்டவர்; அதற்குப் பிறகு உணவையே கண்ணுல் பார்க்கவில்லை. வயதான காலத்தில் பத்து மைல் நடப்பதென்றுல் எளிதான வேலையா என்ன? அடுத்த ஊரை நெருங்கும்போதே அவருடைய கண்கள் இருண்டன; கால்கள் ஒன்றொடொன்று பின்னிக் கொண்டன! எங்கோ பறந்து செல்வது போன்ற ஓர் உணர்வு. அதன் பிறகு அவர் கண்விழித்துப்பார்க்கும் போது ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்திருப்பதையும்,பக்கத்தில்அந்த

ஊர்க்காரர்கள் இரண்டொருவர் நின்றுகொண்டிருப்பதையும் கண்டார். அவருக்கு என்னவோ போலிருந்தது. திடீரென்று பென்ஷன் வாங்கவேண்டிய நினைவு வந்ததும் அருகிலிருந்தவரைப் பார்த்து மணி என்ன என்று கேட்டார். அவரோ மணி பன்னிரண்டு என்று கூறினர். கச்சேரிக்குச் செல்ல இன்னும் நான்குமைல்கள் நடந்தாக வேண்டுமே! சட்டென்று எழுந்து தனக்கு உதவி செய்தவர்களிடம் நன்றி தெரிவித்துக்கொண்டு அவர்கள் சமயத்தில்கொடுத்த ஒரு குவளை மோரையும் குடித்துவிட்டு மீண்டும் நடக்கத் தொடங்கினர். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அவர் கச்சேரியில் அடைந்தபோது மணி 2-30. அதன்பிறகுதான் முதலில் கண்டபடி நேரங்கழித்து வந்ததற்காக அதிகாரி கடிந்துகொண்டு பென்ஷன் அளிக்க மறுத்துவிட்டார். என்ன செய்வது என்று தோன்ருமல் அப்படியே கச்சேரி வராந்தாவில் போட்டிருந்த பலகையில் அமர்ந்துவிட்டார். ஜன்னல் வழியே உள்ளே பார்வையை ஓட்டினர். அதிகாரி வெகு மும்முரமாக வேலையில் மூழ்கி இருந்தார்—ஆசிரியரின் எண்ணம் எங்கோ சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தது. அப்போது வெகு வேகமாக ஒரு புத்தம் புதிய கார் கச்சேரிக்கு முன்புறமாக வந்து நின்றது. அதிலிருந்து நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெரிய மனிதர் இறங்கி, கையில் தோல் பையுடன் உள்ளே சென்ருர். அடுத்தகணம் அதிகாரியின் அறையில் வரவேற்பு அமர்க்களப்பட்டது. அப்படிப்பட்ட மனிதர் யாராயிருக்கும் என்று அறியப் பார்வையை ஜன்னல் வழியாக உள்ளே செலுத்தினர்.

சற்றுமுன்பு எள்ளும்கொள்ளும் வெடிக்கச் சீறிவிழுந்த அதிகாரி, வந்த புதிய மனிதரோடு சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார். வந்தவரோ காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக "ஒரு பார்ட்டி தௌசனுக்குப் (40,000-00) பில் கொண்டுவந்திருக்கிறேன். வரும்போது கொஞ்சம் கடையில் வேலை இருந்ததால் லேட்டாகிவிட்டது. இன்று கேஷ் பண்ணிவிடலாமா" என்று தேனெழுகக் கேட்டார். அந்த அதிகாரியோ கொஞ்சங்கூட முகம் சுளிக்காமல் "அதற்கென்ன, இப்பொழுதுதான் கணக்கு முடித்தேன், பரவாயில்லை; அட்ஜஸ்ட் பண்ணிக்கொள்கிறேன்" என்று கூறியபடி அவரே பில்லைவாங்கி பணத்தை எண்ண ஆரம்பித்தார். இதைக் கண்டவுடன் அந்த ஏழை ஆசிரியரின் உள்ளம் குமுறும் எரிமலையாகியது! பாவம்! அவர் என்ன

# பயமில்லை!

[ பொன்னகர்—மாணிக்கம் ]

யுத்தம் என்ருல் நடுங்கவா? — அந்த
யுத்தம் வரினும் ஒடுங்கவா?

தேய்ந்துவரும் தென்னகத்தின்
தீர்வுகாண முயல்வதும்!
மாய்ந்து வரும் பழம்பெருமை
வாழவைக்க முழங்குவதும்

குண்டு என்ருல் அஞ்சவா?—அந்தக்
குண்டு பாயினும் கெஞ்சவா

சிறையும் என்ருல் பதுங்கவா?—அந்தச்
சிறையில் புகினும் ஒதுங்கவா?

விலங்கேற்ற திராவிடத்தின்
விடிவுகாண விழைவதுவும்!
களங்கமேற்ற சரித்திரத்தின்
கறைபோக்க வேண்டுவதுவும்

தண்டனை என்ருல் வணங்கவா?—அந்தத்
தண்டனை பெறினும் இணங்கவா?

கடமை தன்னை மறக்கவா? —அந்தக்
கடமை துறந்தும் இருக்கவா?

இதயம்வாழ் திராவிடத்தின்
இருளகற்ற உழைப்பதுவும்!
உதயமாக்கி வீரவேட்கை
உயிர்கலந்து உய்வதுவும்

மானம் தன்னை இழக்கவா?—அந்த
மானம் இழந்தும் பிழைக்கவா?

செய்யமுடியும்? அடுத்த பத்துநிமிடத்தில் வந்த பெரியமனிதர் தோல்பை நிறைய ரூபாய் நோட்டுகளை அடுக்கிக்கொண்டு எழுந்தார். பிறகு ஏதோ திடீரென்று நினைவுவந்தவர் போன்று ''அப்ப நான் வரட்டுங்களா'' என்று சிரித்தபடியே விடைகேட்டார். "அதற்கென்ன, போய் வாருங்கள்'' என்று மலர்ந்த முகத்துடன் விடைகொடுத்து அனுப்பினார். உடல் தளர்ந்து உள்ளம் சோம்பியிருந்த அந்த ஏழை ஆசிரியர் என்ன செய்வது என்று புரியாமல் குழம்பி நின்றார்! பிற்பகல் 2-30-க்கு வந்த தனக்கு நேரமாகிவிட்டது என்று கூறியவர் 3-15-க்கு வந்த பெரிய மனிதருக்குப் அட்டியின்றிப்பணம்கொடுத்ததைஎண்ண எண்ண அவருடைய நெஞ்சம் வெடித்துவிடும்போலிருந்தது! என்ன செய்வது! அவர் இதை எவரிடம் போய்க்கூறுவார்! யாரிடம்சொல்லித் தான் என்ன பயன்? காலமெல்லாம் வறுமையைத் தவிர, வாட்டத்தைத் தவிர வேறெதையும் கண்டிராத அந்த ஆசிரியர் புலம்பும் உள்ளத்தோடு ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

அவர் கிராமத்தை அடைந்த போது இரவு மணி சரியாக ஏழு. தெருக்கோடியை அடையும்போதே தன்னுடைய வீட்டிலிருந்து எழும் அழுகுரலைக் கேட்டார். அவரால் என்ன நடந்திருக்கும் என்பதை எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. என்னசெய்வது! மகளின் உயிரைக் காப்பாற்ற உதவாத பென்ஷன் பணம் அவளுடைய உடலை அப்புறப்படுத்தக்கூட உதவவில்லை. அவர் யாரையும் குறைகூறத் தயாராக இல்லை! ஏழையாப் பிறந்து, ஏழையாய் மடிய நேர்ந்த தன்னுடைய நிலைமையைத்தான் எண்ணி எண்ணி வேதனையடைந்தார். இனி வீட்டிற்குச் சென்றுதான் என்னபயன் என்ற எண்ணம் தோன்றவே, தெருக்கோடியில் எப்போதோ கட்டப்பட்டு இப்போது பாழடைந்துகிடக்கும் அந்தக் கோயிலின் வாயிற்படியில் துண்டை விரித்துப் படுத்தார். மூடிய அவர் கண்களிலிருந்து அவர் நெஞ்சில் தேக்கி வைத்திருந்த பாசம் இரண்டு சொட்டுக் கண்ணீராகி மண்ணில் வீழ்ந்தது — மகளுக்காக அவர் அதைத் தவிர வேறெதையும் செய்ய இயலவில்லை.

★

# நில் (லாய்) இரவே!

—[நா. நாராயணன்]—

பாண்டி நாட்டின் மன்னன் அவன். அவனை அடைய எண்ணி ஆவல் கொண்டோர் தொகை ஏராளம். பவனி வருகையிலே உள்ளம் பறி கொடுத்த பாவையர்கள் அதிகம்.

ஓர்நாள் குதிரை மீதேறி வீதிவலம் வருகிறான் பாண்டியன். மக்கள் அனை வரும் வாழ்த்தி வணங்குகிறார்கள். கன்னியர்களோ காதல் மேலிடக் கள்ளப் பார்வை பார்க்கின்றனர். 'போர்க்களத்துப்' பயிற்சி பெற்ற பரி வெகு வேகமாகப் பாய்ந்து சென்று, பாண்டியனைப் பார்வையிலிருந்து மறைத்துவிடுகிறது. கண்ணுக்கு விருந்தான காவலனின் உருவத்தை மறைத்த கோபத்தில் பரிமீது பாய்கிறாள் அப் பாவை. "ஏ! குதிரையே!" உனக்குக் கொஞ்சமாவது இரக்கம் கிடையாதா? போரகத்துப் பாய்கிறாய்! அது பொருளுடையது; ஊரகத்தும் பாய்ந்து செல்கிறாயே? இங்கு யாரும் பகைவர்கள் இல்லையே?'' என்று அங்கலாய்க்கிறாள்.

இவ்வாறு தங்கள் பார்வையிலிருந்து அவன் மறைவதைக்கூடப் பொறுக்கமாட்டாத பாவையர்கள் தொகை பெருகி வந்தது.

ஓர்நாள் இரவு, அவர்களுள் ஒருத்தியோடு கூடிக் களிக்கிறான் பாண்டியன்.

'முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற' பேதையர் நிலை தனக்கும் ஏற்பட அவள் ஒருப்படவில்லை. அணைப்பு இறுகியதே தவிர, விலகவில்லை; விலகவிடவில்லை அவள்.

எண்ணிக் கிடந்த நாயகனும்; ஏங்கிக் கிடந்த நாளும் அருகிருக்கையில், அவனோடு பின்னிக் கிடப்பதைத் தவிர வேறென்ன வேலை அவளுக்கு?

இரவு முழுவதும் ஒரே இன்ப வேதனை. அனுபவித்தவள் அயரவில்லை. இன்னும் இன்னும் இரவு நீளவும், இன்பம் பெருகவும் வேண்டும், என்று எண்ணுகிறாள். எவ்வளவு நேரம்தான் நிலவு காயும்?

எண்ணி ஏங்கிய நாட்களின் துன்பத்தை எல்லாம் இந்த ஒரு இரவு இன்பத்தில் சரிக்கட்ட நினைக்கிறாள்.

"நில்லாய்! இரவே! நீண்டுசெல். சீக்கிரத்தில் விடிந்துவிட்டால் இன்று யான் பெற்ற இன்பத்தை நீண்ட நேரம் சுவைத்து அனுபவிக்க முடியாது. எனவே இரவே! நீ விடியா இரவாய்ச் செல்வாய்! செல்வாய்!!'' என்று கூறுகிறாள் இரவைப் பார்த்து.

ஆனால் அதே நேரத்தில் பாண்டியனது 'குளிர் சாந்து அணிஅகலம்' எய்தாது இராக் களித்த ஏனைய பெண்களோ, 'ஏ பொல்லா இரவே! நீ சீக்கிரத்தில் தொலைந்துவிடு. நீண்டு நீண்டு எங்களை வாட்டி வதைக்காதே. அவன் இல்லாது இனியும் இந்த நிலவைக் கழிக்க எங்களால் முடியாது' என்று விரட்டுகின்றனர்.

சுட்டெரிக்கும் பெரு நெருப்பாய்க் காய்கின்ற நிலவு, "மலர்த்தார் மாறன் மணி மார்பு அணையாதோர்க்கு'' எட்டிக் காயாய்க் கசக்கிறது.

ஒருத்திக்கு மட்டும் இன்பமளிக்கின்றஇரவு, பலருக்குத்துன்பத்தைக் கொடுக்கிறது.

இவ்வாறு ஒருத்தி 'இரு' என்பதும், பலர் 'போ' என்பதுமான இரவு சுவைத்தற் குரியது தானே!

புல்லாதார் வல்லே
புலர்கென்பர், புல்லினார்
நில்லாய் இரவே
நெடிது என்பர் – நல்ல
விராஅ மலர்த் தார்மாறன்
ஒண்சாந்து அகலம்
இரா அளிப்பட்டது.

--(முத்தொள்ளாயிரம்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

அவன். அலுவலகத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

'என்ன விந்தை, எதிரே வாசு அல்லவா வந்துகொண்டிருக்கிறுன்! சொல்லிவைத்தாற்போல் வருகின்ருனே அவன்! சோதனையா இது! ஐயோ, பத்து நாட்கள் எதற்காக ஒளிந்துகொண்டிருந்தேனே, எந்த நிபந்தனையைக் காப்பாற்றவேண்டுமென்று பெரும் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கின்றேனே, அதை நினைக்தது நினைத்தவாறு என்னுல் நிறைவேற்ற முடியாதுபோலிருக்கிறதே!—ஆமாம், முருகேசனுரும், அவர் நண்பரும் என்னிடம் போட்டிருக்கும் நிபந்தனை நியாயமானதுதானு? அதற்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டுமா? அதைக் கண்டிப்பாக நான் கடைபிடித்துத்தான் தீரவேண்டுமா?—ஏன், அதை மீறினுல் என்ன? என்ன செய்துவிடுவார்கள் அவர்கள்!—சேச்சே, இப்படி நினைப்பது தவறு. முருகேசனுர் எனக்குச் செய்த உதவிக்கு நான் நன்றிகாட்டித்தானே தீரவேண்டும்! அவர் கூறிய நிபந்தனைக்கு உட்பட்டுவிட்டு, இப்போது அதிலிருந்து நழுவினுல் என்னிடம் மனிதத் தன்மையே இல்லை என்றுதானே ஆகும்! —அப்படியானுல்... வாசுவிடம்...... பேச்சுக் கொடுக்காமலே போய்விட வேண்டியதுதானு?அவனை நிமிர்ந்து பார்க்காமல் போய்விடவேண்டியதுதானு? — இது எப்படி முடியும்! அவன் நேரெதிரே வருகிருன். அவனைப் பார்த்தும் பார்க்காததுபோல் எப்படி அவனைக் கடந்துபோக முடியும்? அப்படியே நான் மௌனமாகத், தலைகுனிந்தவண்ணம் சென்ருலும், நான் மேலே செல்லும்படி அவன் விட்டுக்கொண்டிருப்பானு? அவன் வலிய வந்து பேசுவானே! அழைத்து, நிறுத்திப் பேசுவானே! அவனிடம் எப்படி முகங்கொடுக்காமல் செல்லமுடியும்?' இப்படிக் கார்த்தி சிந்தித்துக்கொண்டு நடந்தான். தெருவில் நெருக்கடி சற்றே மிகுந்து, சந்தடி நிறைந்திருந்தது. அந்த நெருக்கடிக்கிடையே தெருவின் எந்த ஓரமாக வாசு வருகிருன் என்று தொலைவிலிருந்தபடியே நன்ருகக் கவனித்துவிட்டு அதன் எதிர்ப்புறத்தில் ஓரமாக விரைந்து நடக்கத் தொடங்கினுன் கார்த்தி. யாரையும் பார்க்காததுபோல் தலை கவிழ்ந்துகொண்டே நடந்தான் அவன். வாசுவும் அப்படியே எதையோ ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டு நடந்தான். தன்னை நெருங்கிக் கடந்துசெல்லும் வரை அவன் கார்த்தியைக் கண்டுகொள்ளவில்லை. இரண்டடி நடந்த பின்னர்தான் வாசு எதிர் வரிசையைச் சற்றே திரும்பிப் பார்த்தான்—தற்செயலாக. 'அடடே, கார்த்தி போகின்ருனே!' என்று உரத்த குரலில் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு "கார்த்தி, கார்த்தி!" என்று பின்னும் உரக்கக் கைதட்டி அழைத்தான்.

வாசு விளித்த ஒலி கார்த்தியின் காதில் விழாமல் இல்லை. அவனு திரும்பிப்பார்ப்பான்! அவன் தன் பாட்டில் நடந்தான். விருவிருவென்று விரைந்து நடந்தான். வாசுவுக்கு ஒருபுறம் வியப்பாக இருந்தது. நண்பன் மீது அவநம்பிக்கை படுவதற்கும் அவனுல் இயலவில்லை. அவனைப் பற்றி நீண்டநேரம் சிந்திப்பதற்கும் முடியவில்லை. அவனுக்கு வேலைகளிருந்தன நிரம்ப.

இப்படியொரு நாலைந்து நாட்கள் சென்ற பிறகு திடீரென்று ஒரு வதந்தி கிளம்பியது. அந்த வதந்தியையோ, செய்தியையோ கிளப்பிப் பரப்பிவிட்ட பெருமை முருகேசனுரைச் சாரும். அவர் சார்ந்திருக்கும் கூட்டத்தைச் சாரும். அவருக்குத் தொண்டுபுரியும் திடீர் நண்பர்கள், மற்றும் காலிகள், கூலிகளைச் சாரும்.

"கார்த்தி மாறிவிட்டான். முருகேசனுரோடு சேர்ந்துகொண்டுவிட்டான். இனி அவன் அறிவியக்க வேலை எதிலும் ஈடுபடமாட்டான்" என்று கூறியது அந்தச் செய்தியாகிவிட்ட வதந்தி.

தேர்தல் வேலைகள் வெகு மும்முரமாக நடந்துகொண்டுவந்தன—எதிர்பார்த்தபடிக்கும் மேலொருபடி, கயமையை மூடி மறைப்பதற்கென்றே வேடம்போட்டவர்கள் தங்கள் எல்லா முயற்சிகளையும் கொண்டு முருகேசனுரைத் தள்ளிக்கொண்டு வந்து தேர்தல் களத்தில் நிறுத்திஞர்கள்.

வாசு அதற்கு முன்னரே தேர்தலில் நிற்கப்போகும் செய்தியை அறிவித்துவிட்டான். அவன் சார்ந்திருக்கும் இயக்கம் அவன் சார்பில் அறிவித்துவிட்டது. அவனுடைய வெற்றிக்காக அந்த இயக்கம், அந்த இயக்கத்தவர் மும்முரமாக வேலைசெய்யத்தொடங்கினர். அந்தப் பகுதியில் குறிப்பிட்ட தொகுதிக்கு அறிவியக்கத்தின் சார்பில தேர்தலில் நிற்கின்றவன் வாசு என்று ஊரறிந்த பிறகுதான், முருகேசனுரைப்பற்றிய பேச்சு வெளியில் அடிபட்டது. தேர்தல் அலுவலரிடம் வேட்பு மனு கொடுக்கப்படும் வரை முருகேசனுரின் போட்டி சந்தேக நிலவரத்திலேயே சென்றுகொண்டிருந்தது. அந்த நிலைகளின்படி, அந்த நடவடிக்கைகளின்படி, வாசு முருகேசனுரை எதிர்த்து நிற்கவில்லை. அவரை எதிர்த்து நிற்கவேண்டும், அவரை முறியடித்து வெற்றி காணவேண்டும் என்பனவற்றைக் குறிக்கோளாகக் கொண்டும் அவன் தேர்தலில் நிற்கவில்லை. மக்கள் தொண்டுபுரியும் வழிகளில் சட்டமன்றப் பணியும் ஒன்று என்ற முறையில் அவன் சார்ந்திருக்கும் இயக்கம் அவனை நிறுத்திவைத்தது தேர்தலில்.

வாசுவிற்கு எதிராகப் பிரசாரம் செய்தவர்கள் தாங்கள் செய்வது பிரசாரம் என்பதையே மறந்து நின்ருர்கள். எதையெல்லாம் மக்கள் முன்னுல் பேசக்கூடாதோ—மக்களாட்சிப் பண்பின்படி—அதையெல்லாம் வாரி வாரி அவர்கள் இறைத்தார்கள். நல்லவர்கள், பண்பு உள்ளவர்கள் தலைகுனியும் வண்ணம் அடுக்கடுக்காக வசை மாரி பொழிந்தார்கள்.

அப்படி அவர்கள் பொழிந்த வசைமாரிகளில் மிகுந்த அளவு கார்த்தி பயன்படுத்தப்பட்டான். அதோடு அறிவுக்கும், பண்புக்கும், நியாயத்துக்கும் எது எது முரணனதோ, அதையெல்லாம் அவர்கள் உரத்த குரலில் ஊர் நடுவே நின்று பேசித் தீர்த்தார்கள். அவர்களின் தலைசிறந்த தலைவர்கள் எனப்பட்ட சிலர் பேசிய பாங்கு, இதோ இப்படி: "இந்த வாசுவைச் சேர்ந்தவர்கள் அறிவியக்கம், அறிவியக்கம் என்று கூறித் திரிவதெல்லாம் வெறும் பித்தலாட்டம்! எல்லாம் வெளிவேடம்! நாட்டைப்பற்றியோ, மொழியைப்பற்றியோ,கலையைப்பற்றியோ முதலில் இவர்களுக்கு நன்ருகத் தெரியாது. நாடு மீட்கிறேன்! நாடு மீட்கிறேன்! என்கிருர்கள் இவர்கள். இதெல்லாம் வெறும் கேலிக்கூத்து. நாட்டை யாரிடமிருந்து இவர்கள் மீட்கப்போகிருர்கள்? இந்த நாடுதான் அந்நிய ஆதிக்கத்திலிருந்து எப்போதோ மீண்டுவிட்டதே! இவர்கள் எண்ணமெல்லாம் நம் நாட்டைத் துண்டாடவேண்டும் என்பதுதான். அப்படித் துண்டாடிய பிறகு அவனுவது வெளிநாட்டுக்காரன் வ

தால், அவனிடம் நாட்டைக் காட்டிக் கொடுத்துவிடுவார்கள் இவர்கள். தமிழர்களையெல்லாம் அடிமையாக்கிவிடுவார்கள் இவர்கள்! மகாசனங்களே, இவர்கள் பேச்சைக் கேட்காதீர்கள்! இவர்களை நம்பாதீர்கள். மோசம், மோசம்! இவர்கள் எண்ணப்படி எதுவுமே நடக்கமுடியாது! இந்திக்காரனை வடக்கத்தியான் என்கிருர்கள்! இது பொருந்துமா? நீங்கள் யோசித்துப்பாருங்கள்! இந்தியாவின் வடக்குப் பகுதியில் அவன் இருக்கிருன். தெற்கே நாம் இருக்கிறேம்! அவன் வேறே, நாம்வேறே என்கிருர்கள்! எப்படி அவன் வேறே? என்ன காரணத்தைக்கொண்டு அவன் வேற என்று சொல்லலாம்? அவன் ரொட்டி சாப்பிடருன்! நாம் சோறு சாப்பிடறேம்! அதனுலேவேறே என்ருல் யாராவது நம்புவார்களா? வங்காளத்துக் காரங்கள் சோறுதானே சாப்பிடுகிருர்கள்! அவன் பைஜாமா போடுகிருன்; நாம் வேட்டிகட்டுகிறேம் என்கிருர்கள். நம்மவர்கள் சூட் கோட் போட்டுக் கொள்ளவில்லையா? அவன் இந்தி பேசுகிருன் என்கிருர்கள். பேசினுல் என்ன? இவர்கள் கூடத்தான் இங்கிலீஷ் பேசுகிருர்கள்!

"இந்தி தேசியமொழி ஆகக்கூடாது என்கிருர்கள்! இதைவிட அநியாயம் வேறு இருக்கமுடியுமா? பஞ்சமா பாதகர்கள் அந்தத் தேவமொழியை வேண்டாம் என்கிருர்களே! அந்த வேத மொழியை வேண்டாம் என்கிருர்களே! இங்கிலீஷைவிட இந்தி என்ன குறைந்துபோய் விட்டது? இவர்களே ஒரு சமயம் வடக்கே போகிருர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்தி தெரியாவிட்டால் தடுமாறியல்லவா போவார்கள் இவர்கள்! இந்தி தெரிந்தால் அங்கே நல்ல மதிப்புக்கூடக் கிடைக்கும். அங்கே உள்ளவர்கள் எல்லாம் பாராட்டக்கூடச் செய்வார்கள்! அங்கே உள்ள அரசியல்வாதிகள் எல்லாம் இவர்களைப்போலே பிச்சைக்காரர்கள் இல்லை. படா படா முதலாளிகள்! படா படா பணக்காரர்கள்! அவர்கள் எல்லாரும் பேசுவது இந்திமொழி! பெரிய அரசியல் வாதிகள் பேசுவது இந்திமொழி! பெரிய பெரிய பணக்காரர்கள், முதலாளிகள் பேசுவது இந்தி மொழி! அப்படியென்ருல் பார்த்துக்கொள்ளுங்களேன்! அதன் பெருமையைத் தனியாக வேறு எடுத்துச்சொல்ல வேண்டுமா? அவ்வளவு பெரிய மதிப்புள்ளவர்கள் பேசுகின்ற இந்தி மொழியை நாம் வேண்டாமென்று சொல்லலாமா? பாருங்கள்! என்ன அநியாயம்! 'இந்தி வேண்டாம்! அது அந்நிய மொழி' என்று சொல்லுகின்றவர்களும் இந்த நாட்டில் உயிரோடிருக்கின்ருர்களே! அதை எண்ணும்போது வயிறு பற்றி எரிகிறதே! அநியாயம்! அக்கிரமம்! இந்தி வேண்டாம் என்று சொல்லலாமா? மனசாரச் சொல்லலாமா? சொல்லிவிட்டு அவர்கள் உயிர் வாழலாமா? ஐயோ, நச்சுப்பாம்புகளல்லவோ இந்தி வேண்டாமென்று சொல்பவர்கள்! இந்நேரம் அவர்களை அடித்துச் சாக்காட்டுக்கு அனுப்பியிருக்கவேண்டுமே! இவ்வளவு நாள் விட்டுவைக்கலாமா? நீங்கள் என்ன நினைத்தாலும் சரி, என்ன செய்தாலும் சரி, நான் மட்டும் அவர்களை அழிக்காமல் சாகமாட்டேன்!" இதுதான் அவர்களின் தேர்தல்பிரசாரம். இதுதான் அவர்கள் வாக்காளரிடம் வாக்குக் கேட்ட இலட்சணம்! அந்தக் கயமையாளரின் பேச்சு இவ்வளவுதான் என்று எண்ணிவிடாதீர்கள். இன்னும சிலவற்றைப் பாருங்கள்:

"பெரியோர்களே, இந்தி வேண்டாம். தேவநாகரி எழுத்து வேண்டாம்' என்று பேசுகிறவன் எவனுவது இருப்பானுனல் அவனைப் பைத்தியக்காரன் என்றுதான் சொல்லவேண்டும்! அதுபோகட்டும்.

"தமிழ் இருக்கிறதே தமிழ்! இங்கேயெல்லாம் இதைப்பற்றிப் பிரமாதமாகப் பேசுகின்ருர்களே,— இந்தத் தமிழை வடக்கிலே யார் பேசுகிருர்கள் தெரியுமா? வெட்கக்கேடு! வடக்கே எந்த நல்லவனும் தமிழ் பேசுவது கிடையாது. குப்பை பெருக்குகிறவள், கூலி வேலை செய்கிறவன், எச்சில் பொறுக்குகிறவன், ஏவலுக்குக் காத்து நிற்பவன், பிச்சைக்காரன், போக்கிரி, நாடுமாறி, தில்லுமாறி, ஊர் தெரியாதவன், பேர் தெரியாதவன், இவங்கதான் அங்கே தமிழ்ப் பேசுகிருர்கள்! இதையெல்லாம் அங்கே போய்ப் பார்க்கும்போது என்னைப்போன்றவர்களுக்கு வெட்கம் பிடுங்கித் தின்கிறது. எங்கே தப்பித் தவறி நாமும் தமிழிலே பேசி மானத்தை வேறே இழந்துவிடப் போறேமோ என்று பயமா வேறே இருக்குது! அங்கேயெல்லாம் தமிழிலே ஒரு வார்த்தை பேசிவிட்டால் போதும்! எல்லாரும் திருடனைப் பார்க்கிறது போலத் தமிழ்ப் பேசியவனைப் பார்க்கிருங்க. இகழ்ச்சிக் குறியோடு பார்க்கிருர்கள். ஏளனக் கணைகளைத் தொடுக்கிருர்கள்! — நானே சொல்றேன் — செச்சே! என்ன இருந்தாலும் இந்தத் தமிழ் பேசுகின்றவர்களுக்கு இவ்வளவு மட்டமான புத்தி இருக்கக்கூடாது! தமிழ் தமிழ் என்று ஏன்தான் இப்படிப் பறக்கின்ருர்களோ? இந்திக்கும் இந்தத் தமிழுக்கும் ஏணி வைச்சாலும் எட்டுமா? வடக்கே இந்திக்கு உள்ளமதிப்புக்கு முன்னே, இந்தத் தமிழ் என்ன அச்சக் காயா, பிச்சக் காயா! இதை வைத்துக் கொண்டு இவர்கள் என்னமோ கோட்டை கட்டுகிருர்களே! — தாய்மொழிப் பற்றும்! தாயகப் பற்றும்! விடுதலையாம்! உரிமை வாழ்வாம்! இப்படியெல்லாம் அறிவுள்ளவர்கள் பேசுவார்களா? இதையெல்லாம் பேசிக்கொண்டு திரிந்தால் பிழைப்புத்தான் ஒழுங்காக நடைபெறுமா? அல்லது மதிப்புத்தான் கிடைக்குமா? ஒன்றுமேயில்லை. நாம் எல்லாம் இந்தியர் இல்லையென்று சொல்கிருர்களே, இவர்கள் ஓட்டுப் போடாமல் இருக்கின்ருர்களா? இந்தியர் என்பதற்காகத்தான் பாராளுமன்றத்து ஓட்டு. தமிழர் என்பதற்காகத்தான் சட்டமன்றத்து ஓட்டு. இவர்கள் இரண்டு ஓட்டுகளையும்தானே போடுகிருர்கள்! போட்டுக்கொண்டிருக்கின்ருர்கள்! பித்தலாட்டம், பித்தலாட்டம். இவர்கள் பேச்சிலோ, செயலிலோ எதிலாவது உண்மை இருக்கின்றதா? நாட்டைப் பிரிப்பதாம! விடுதலை பெறுவதாம்! இதெல்லாம் ஆகக்கூடியதா? வடக்கே இருப்பவர்கள்தாம் நம்மையெல்லாம் ஆளத் தகுதி படைத்தவர்கள். இங்கிலீஷ்காரர்களைவிட அவர்கள் ரொம்பவும் நல்லவர்கள்! அவர்களிடம் ஒத்துப்போவதுதான் புத்திசாலிகள் செய்யவேண்டிய காரியம்! அதையெல்லாம் விட்டுவிட்டு, வடக்கேயிருப்பவர்களை எதிர்த்தால் விளைவு வேறுவிதமாகப் போய்விடும்! அங்கே உள்ளவர்கள் எல்லாம் பணக்காரர்கள்! பெரிய அசகாய சூரர்கள்! இங்கிலீஷ்காரனைப்போலே இந்த வடக்கத்தியாரையும் நீங்கள் நினைத்துவிடாதீர்கள். இந்த வடக்கத்தியார்கள் கையில் சிக்கிவிட்ட எதையும் எளிதில் விட்டுவிட மாட்டார்கள். எதிர்ப்பவர்களைக் கொன்று குவிக்காமல் விடமாட்டார்கள்! ஆற்றலான பலமெல்லாம் அவர்களிடம் இருக்கிறது. அதோடுகூட நம்முடைய அரியபெரிய தலைவர்கள் எல்லாம் அந்த வடக்கத்தியார்கள் தாம். நமக்கெல்லாம் தலைவர்களே

அங்குதான் பிறக்கின்ருர்கள்.நமக்கு யோசனை சொல்லக்கூடியவர்கள் எல்லாம் வடக்கேதான் இருக்கிருர் கள்! நமக்கு வழிகாட்ட வேண்டிய வர்கள் எல்லாம் வடக்கேதான் இருக்கிருர்கள்! நமக்குக் கட்டளை பிறப்பிக்க வேண்டியவர்கள் எல் லாம் வடக்கேதான் இருக்கிருர்கள்! நம்மை ஆள்பவர்களும் அவர்கள் தான். நம்மை ஆளத் தகுதி படைத் தவர்களும் அவர்கள்தான். நம்மை ஆளவேண்டியவர்களும் அவர்கள் தான்.

"இப்படி நம்முடைய அரியபெரிய தலைவர்கள் எல்லாம் இருக்கின்ற பகுதியை வேற்று நாடு என்று சொல்லலாமா? நம்முடைய அரிய பெரிய தலைவர்கள் பேசுகின்ற மொழியை வெறுத்து ஒதுக்கலாமா? சிந்தித்துப் பாருங்கள்! விடுதலை என்பது வெற்று வாதம். தாய் மொழி என்பது வெற்றுப்பேச்சு. அவை ஆகாத வார்த்தைகள். அவற்றை விட்டுவிடுங்கள்!"

இப்படிப் பேசியவர்களும், பேசு கின்றவர்களும் சாமானியர் என்று எண்ணிவிடாதீர்கள். அந்தக் கயமையாளர் கூட்டத்தின் பெரிய தலைவர்களே அவர்கள்தாம். முன் னேடிப் பேச்சாளர்களே அவர்கள் தாம்! நாட்டுக்கு அமைச்சர்களே அவர்கள்தாம். சட்டங்கள் செய்ய வும், பட்டங்கள் ஆளவும் எம்மை விடத் திறமைபடைத்தோர், தகுதி படைத்தோர் வேறு யாருளர் என்று அடாவடி ஆட்சி நடத்துவோரும் அவர்கள்தாம்!

அமைச்சர் நிலையில்—இடத்தில்—அமர்த்தப்பட்டோரின் பேச்சே அப் படி என்ருல், அவர்கள் கூலிக்குப் பிடித்த எடுபிடிகளின் பேச்சு எப்படி அமைந்திருக்கும்! சொல்லவேண் டுமா அதை! ஐயோ, அந்த ஆபா சத்தை, அந்த அக்கிரமத்தை அவா களைத் தவிர வேறு யாராலும் கேட் டுக்கொண்டிருக்க முடியாது!

தேர்தல் நடவடிக்கைகள் மிகமிக மும்முரமாக நடந்தன. காட்டாட்சி நடத்துவோர் சாட்டாட்டம் ஆடி ஆடிக் களித்தனர். அடக்குமுறைக் கணைகள் யாரும் எதிர்பாராத அளவு எங்கெங்கும் எடுத்தெடுத்துத் தொடுக்கப்பட்டன. காற்றுக்கும் வசைக்கும் வேற்றுமை இல்லை என எண்ணுமாறு எங்கெங்கும் வசவு களைப்பரவவிட்டனர்.தெருவெல்லாம் பணம் இறைந்தது. மொத்தத்தில் அவர்களுக்கு அந்தத் தேர்தல் பெரியதொரு வெறிக் கூத்து.

அந்த வெறிக்கூத்துக்கு இடை யிடையேதான் கார்த்தியின் பெய ரும் அடிபட்டுக்கொண்டுவந்தது. எப்படி எப்படியெல்லாமோ அவன் பெயர் இழுக்கப்பட்டுக்கொண்டு வந்தது. பாவம் அவன்! என்னசெய் வது என்று தோன்ருமல் தத்தளித் துத் தடுமாறிக்கொண்டு கிடந்தான். எங்கோ ஒரு மூலையில் அடங்கி ஒடுங்கிக்கொண்டு கிடந்தான். அவ னைப்பற்றிக் கிளப்பிய வதந்திகளை மறுப்பதற்கு அவனிடம் வலிவில்லை. அவற்றை அவனுல் ஏற்றுக் கொள்ளமுடியுமா? யார் கண்ணி லும் படாமல் தலைமறைவாகவே அவன் உலவிவந்தான். பித்தம் பிடிக்கவில்லை அவனுக்கு. அது விந்தைதான். பிறருடைய உதவியை எவ்வித முன்யோசனையும்மில்லாமல் தான்பெற்றது எவ்வளவு பெரிய தவருகிவிட்டது என்று அவன் எண் ணியபோதெல்லாம் அவன் உள் ளம் நின்று நின்று இயங்கியது.

'என்னையொரு மனிதன் நிலையி லிருந்தே இறக்கிவிடும் மற்றவர் களிடம் நான்பெறும் உதவியென்று முன்னமேயே நான் அறிந்து கொள்ளாமற் போய்விட்டேனே! — ஐயோ, நான் பெரிய துரோகியாகி விட்டேனே! மனச்சான்றை இழந் தவனுகிவிட்டேனே! இனி நான் மனி தனுக எப்படி உலவுவது? இனிநான் துரோகியல்ல என்ற பெயரை, எப் படி எடுப்பது? வாழ்க்கையில் முன் னேற வேண்டுமென்ற ஒரே ஒரு எண்ணத்தை மட்டும் நான்கொண் டிருந்தேன். அந்த முன்னேற்றத் திற்கு உதவுவோர் எப்படிப்பட்டோர் எனபதை நான் நினைத்துப்பார்க்க மறந்துவிட்டேன். தாமே வலிய உதவ முன்வருவோரின் நோக்கம் என்னவாக இருக்கமுடியும் என் பதை உன்னிப்பார்க்கத் தவறிவிட் டேன்; மறந்துவிட்டேன்! அந்தத் தவறு, அந்தமறதி இப்படி மாபெரும் கெடுதியாக, இடர்ப்பாடாக முடியுமென்று நான் கனவில்கூட எண்ணவில்லையே!—ஐயோ, என்னை யறியாமலேயே விளக்கைப்பிடித் துக்கொண்டு கிணற்றில் விழுந்து விட்டேனே நான்! பிறருடைய உதவி கிடைப்பது எளிதல்ல என்று எல்லாரும் சொல்கிருர்கள்!—அது உண்மையாகவும் இருக்கிறது! ஆனுல், அதைவிடப், பிறருக்குச் சிலர் வலியவந்து காட்டும்பரிவும், செய்யும் உதவியும் மிகமிகக் கொடுமையான நோக்கத்தை உள் ளடக்கிக் கொண்டல்லவா கிடக்கின் றன. ஒருவனுக்குப் பிறருடைய உதவி கிடைக்காத முன்னிலையால் கூடுதல் அளவு அந்த ஒருவன் தன் உயிரை இழக்கும்படி நேரலாம்— பட்டினிகிடந்து. அல்லது அந்த ஒரு வனுடைய உற்ருரும், சுற்றமும் உண்ணும் உணவும், உடுக்கும் உடையும்இருக்குமிடமும்கிடைக்கப் பெருமல் அல்லற்பட்டு அலைமலந்து —அவர்களும் உயிர்விட நேரலாம்! அவையெல்லாம் அவ்வளவு பெரி யன அல்லவென்று சொல்லும் அள வல்லவா இப்போது சூழ்ந்துகிடக் கும் நிலைமைகளிருக்கின்றன! உயிரைவிட மேலான மனச் சான்றையல்லவா தகாததோரிடத் தில் உதவிபெற்ற ஒருவன் இழக்க வேண்டியுள்ளது! ஐயோ, இப்படிப் பட்ட மாபாதகப் படுகுழியில் வீழ்த் தப்பட்டவர்கள் என்னைப்போல் எத்தனைபேரோ!— மனச்சான்றைக் காட்டாய முறையால் இழந்து தவிப்பவர்கள் என்னைப்போல் எத் தனைபேரோ!" இப்படி ஓயாமல் ஒழியாமல் அழுதழுது உருகு வதையே வேலையாகக்கொண்டு விட்டான் கார்த்தி.

## 7. இழந்தனை எதையும் இல்லை நீ ஏறெனை மீண்டும் நடைபோடு

வாக்களிப்பு நாள் நெருங்கி வர வர,வாசுவுக்கு ஒவ்வொன்றும்புரிந்து கொண்டு வந்தது. கார்த்தியின் நிலையை அவன் தானே சிந்தித்து உணர்ந்துகொண்டான். மற்றும் அந்தக் கூட்டத்தின் ஒவ்வொரு திருவிளையாடலும் அவன் கண் முன்னுல் வந்து நின்று நர்த்தன மாடின. பாவம் அவன் தந்தை முருகேசனுர்! எப்போதோ அவர் களின் கைப்பாவையாகிவிட்ட அவர் அந்தக் கொடியவர்களிடமிருந்து தப்புவதற்கு முடியாமல் திக்குமுக் காடினுர். அவரை வைத்துக் கொண்டு அவர்கள் ஆடிய ஆட்டம் கொஞ்சமா! செல்வம் எல்லாம் சூறைபோனது ஒருபுறமிருக்க, எத் துணை எத்துணை பழிகள் அந்த முருகேசனுர்மீது வந்து சுமந்து கொண்டன. பாவம், ஆலைவாய்க் கரும்பாக மாறினுர் அவர் என்று சொல்வதா, கசாப்புக்காரனிடம் சிக் கிய ஆடாக மாறினுர் என்று சொல் வதா! அவர் படும்பாட்டைப்பார்த்தே

எதிர்த்து வேலை செய்தோர் சிலர் இரக்கங்காட்டி —மனிதாபிமானத் தால்—விட்டுக்கொடுக்கும் நிலைகூட வந்தது.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட போது 'முருகேசனுர் வெற்றி பெற் ருர்' என்றுதான் அறிவித்தார்கள். ஆனுல் முருகேசனுரால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதாவது அந்த வெற்றியை வெற்றி யென்று அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரு கணம் மலைத்து நின்ற பிறகு அவர் நிம்மதிப் பெரு மூச்சொன்று விட்டுக்கொண்டார். 'ஐயோ, இந்தச் சூழ்ச்சிக்காரர்கள் என்னை எவ்வளவு பாடுபடுத்தி விட்டார்கள்! எவ்வளவு சித்திர வதைக்குள்ளாக்கிவிட்டார்கள்! எத் தனை பழிபாவங்களை என் மீது சுமத்தி விட்டார்கள்! எவ்வளவு பணத்தை என்னிடமிருந்துஉறிஞ்சிக்கொண்டு விட்டார்கள்! இனிமேலாவது இவர் கள் தொல்லை ஓயுமல்லவா! இதே போதும்!' என்ற நிம்மதிப் பெரு மூச்சுத்தான் அது!

அந்த முடிவு கண்டு வாசு வருந் தத்தான் செய்தான். ஆனுல் அந்த வருத்தம் வேறு வகை. தனக்கு வெற்றி கிட்டவில்லையே என்பதற் காக அவன் வருந்தவில்லை. அவன் தந்தை முருகேசனுர் வென்ருரே என்பதற்காகவும் அவன் வருந்த வில்லை. தன்னுடைய அரிய நண் பன், ஆருயிர் நண்பன் கார்த்தி பெரும் மனத்துன்பத்திற்குள்ளாக நேரிட்டதே என்பதற்காக அவன் வருந்தினுன். தான் எந்த நோக்கத் தோடு அவனுக்கு உதவிகள் பல புரிந்தானே, அந்த நோக்கத்திற்கு எதிர்மாருன பயன் நேர்ந்துவிட்டதே என்பதற்காக அவன் வருந்தினுன். நல்லவராகிய தன் தந்தை நயவஞ்ச கர்களின் கூட்டினுல், தூண்டுத லால் கைம்மாறு கருதி உதவி செய் தார் எனும் பழிக்காளாகிவிட்டாரே என்று வருந்தினுன்.

'ஆமாம் இத்தனைக்கும் காரணம் யார்?' அவன் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான்.

'இந்த நாட்டை என்றென்றும் அடிமைக் குழியில் வீழ்ந்துகிடக்கு மாறு செய்து அதன் மூலம் தனிப் பட்ட தாங்கள் மட்டும் நன்மை பெற, புகழ்பெற நினைக்கின்ற அந் நிய ஆதிக்கத்தின் அடிவருடிகள் அல்லவா காரணம்! ஏகாதிபத்தியத் திற்கு ஏவல் புரியும் கூலிகள் அல் லவா காரணம்! அந்த நயவஞ்சகர் கள், அந்த நாசகாரர்கள் எதைச் சொன்னுலும் அது உண்மையா, இன்மையா என்று ஆய்ந்துணர்ந்து, உய்த்துணர்ந்து பார்க்கும் ஆற்றலை இழந்து கிடக்கும் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களின் பாமரத் தன்மையல்லவா காரணம்!—அவர் கள் பட்டுழலும் வறுமையெனும் கொடுமையல்லவா காரணம்!'

இப்படி எண்ணியபோது திரும்ப வும் வாசுவிற்குத் திகைப்புத்தான் ஏற்பட்டது.

'ஆமாம், இவ்வளவு காலம் நானும், நான் சார்ந்திருக்கும் இயக்க மும் மக்கள் முன் எடுத்துவைத்த உண்மைகள் இன்னும் அவர்கள் மனத்தில் ஏறவில்லையா? ஏறவில்லை என்ருல் அதன் முன்னிலை யாது? நாங்கள்–நான் – எடுத்துச்சொன்ன பக்குவம் போதாதா? அப்படித்தானே இருக்கவேண்டும்! — ஆமாம் நான் சற்றுமறந்துவிட்டேன்-சற்றுத்தான் — நான்,—என் இயக்கம்—எடுத் துச் சொல்லும் உண்மைகளை மூடி மறைப்பதற்கென்று உருப்பெற்று நிற்கும் மாற்ருர் கூட்டம் என்னி லும் வலிமையுடையது. அந்த வலிமை அந்த மாற்ருர்க்கு நியாய மான வழியில் கிடைத்ததாக இல்லா மல் இருக்கலாம். உண்மையான முறைகள் மூலம் கிடைத்ததாக இல்லாமலிருக்கலாம்! மனச்சான் றைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு அந்தக் குழிமேட்டில் நிற் கின்ற ஆற்றலாக அந்த ஆற்றல் இருக்கலாம். அந்த ஆற்றலின் துணை வஞ்சகமாக இருக்கலாம்; கயமையாக இருக்கலாம்; கொடுமை யாக இருக்கலாம்; அச்சமூட்டி வெட்டும் ஆபாசமாக இருக்கலாம். அதேசமயம் அந்த ஆற்றலை எதிர்த்து நிற்கும் என் ஆற்றல், என் இயக்கத்தின் ஆற்றல் நியாய மானதாக, உண்மை உள்ளதாக, மனச்சான்று கொண்டதாக, இனிமை நிறைந்ததாக, ஏற்றம் உடையதாக இருக்கலாம்! எனினும் இன்றைய நிலையில் இதன் வலி அதனினும் சிறிது. ஆகவேதான் இந்த உண்மை அந்த இன்மையால் முறியடிக்கப்பட்டுவிட்டது. இந்த நியாயம் அந்த அநியாயத்துக் கெதிரே தலைகுனிந்துவிட்டது. இந் தப் பண்பு அந்த இழிதகைமைக் கெதிரே தோற்றுக் காட்டிவிட்டது. இந்த நாகரிகம் அந்த அநாகரிகத் துக்கு முன்னே தாக்குப்பிடிக்க வில்லை. இந்த இசை அந்த வசைக்கு முன்னுல் அற்பமாகிவிட்டது. எனி னும் இது என் தோல்வியல்ல. நியாயத்தின் தோல்வி. உண்மை யின் தோல்வி. நாகரிகத்தின் தோல்வி. பண்பின் தோல்வி. இசை யின் தோல்வி. அன்பின் தோல்வி. சால்பின் தோல்வி. நன்மையெனப் பெறப்படும் அனைத்தின் தோல்வி! இனி என் வேலை திரும்பத்திரும்ப அந்த அநாகரிகத்தை எதிர்த்து நிற் பதே! அந்த இழிதகைமையை முறி யடிக்கத் திரும்பத் திரும்ப முயன்று நிற்பதே! இந்த முயற்சி என் முயற்சி! என் இயக்கத்தின் முயற்சி! இந்த நாட்டின் முயற்சி!"

எழுந்தான் வாசு, நடந்தான். எங்கே? அதோ, கார்த்தி இருக்கு மிடம் சென்று அவனை இழுத்துவர! நடந்ததை மறக்கடித்து, அவன் கோழைத்தனத்தை ஓட்டி, நாட்டுக்கு நல்ல பல பணிகளை அவனுல் செய்ய முடியும் இனி வரும் நாட்களில் என் பதை நினைவுபடுத்தி, அவ்வழி அவனைச் செயல்படுத்த. அவன் நல்லவன், இனிமேல் வல்லவன், என்றென்றும் நம்மவன் என்பதை நாடறியச் செய்ய.

அதோ பேசுகிருன் வாசு!

"கார்த்தி! வாழ்ந்திருந்த குடி யைச் சேர்ந்த நீ, பின்னர் தாழ்ந்து

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

பொறுப்பாளர்.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

விட்டாய்! உன் தாழ்வை விலைக்கு வாங்கிக்கொண்டு உனக்கு வாழ்வளிக்க முன்வந்தார்கள் நயவஞ்சகர்கள். அது ஏன்?—ஏன் அவர்கள் வலிய வாழ்வளிக்க முன்வருகிறார்கள் என்பதை நீ கவனிக்கவில்லை. நானும் கவனிக்க மறந்துவிட்டேன். அதன் பின் வினைவைக் கைக்கு மெய்யாகக் கண்டுவிட்டோம்.

"உன் துன்பத்தை உன் நிலையோடு மட்டும் வைத்து எண்ணாதே. இனி அதனைப் பின்னும் பரக்க வைத்து எண்ணிப்பார்! இந்த நாடும் உன் நிலையிலிருப்பதை நீ உணர்வாய்! நீ வாழ்ந்த குடியைச் சேர்ந்தவன், இன்று தாழ்ந்து கிடக்கிறாய்! இந்த நாடு வாழ்ந்த குடிகளின் வீடு! இன்று தாழ்ந்து கிடக்கின்றது. இந்தச் சமுதாயம் ஆண்ட சமுதாயம்! இன்று அடிமையாகிக் கிடக்கின்றது. நீ வாழ நினைக்கிறாய்! அப்படியே இந்த நாடும் வாழ வேண்டுமென்று நினை! உன் வாழ்வே இந்த நாட்டின் வாழ்வு! இந்த நாட்டின் வாழ்வே உன் வாழ்வு! இந்த நாடு வாழ்ந்தால்தான் நீ வாழ முடியும்! நாடு வாழாமல் நீ மட்டும் வாழ முடியும் என்று எண்ணாதே! அந்த வாழ்வு அந்தர வாழ்வு!—'இப்படிச் சிலர் வாழ்கிறார்களே! மாற்றானின் பாதங்களைக் கழுவிக் குடித்து, அதன் மூலம் உயர்ந்த பதவி பெற்று, அந்தத் தாழ்வையே, மானமிழப்பையே வாழ்வென்று எண்ணிக்கொண்டு திரிகிறார்களே சிலர்! சும்மா திரிந்தால் போதாதென்று அந்த மானங்கெட்ட உயர்ந்த பதவிச் செருக்கால், மேட்டிமையால் இந்த நாட்டின் பெருமையைத், தமிழர்களின் மாண்பை எள்ளுகிறார்களே,—வாய் கூசாது இந்த நாட்டின் விடுதலைத் தலைவர்களை, வீரர்களைப் பார்த்து இகழ்ந்துரையாடித் திரிகிறார்களே அந்தக் கயமையாளர்கள், அவர்கள் வாழ்வதாக எண்ணிக் கொண்டுதானே அப்படி ஆணவத்தோடு பேசித் திரிகிறார்கள்?! என்று வினவலாம் நீ! ஒன்றை நினைவில் வைத்துக் கொள்! உயர்ந்த பதவி வகிப்பதால் ஒருவன் பேரறிவாளனாகிவிட முடியாது! தாழ்ந்த நிலையிலிருப்பதால் ஒருவன் அறிவுக் குறைவுள்ளவன் ஆகிவிட மாட்டான். அதுவும்அந்நிய ஆதிக்கம் காட்டாட்சி புரியும் நாட்டில் அறிவுக் குறைவுள்ளவர்கள், சூடு சொரணை இல்லாதவர்கள் சொந்தச் சிந்தனை இல்லாதவர்கள்—இப்படிப்பட்டோரைப்பார்த்துத்தான் பெரிய பெரிய பதவியிலிருத்துவார்கள் ஆதிக்கம் புரிவோர்!

"ஆகவே, நம் விடுதலை வேட்கையை எள்ளுவோர் எள்ளிக் கொண்டே இருக்கட்டும்! நாம் எடுத்த அடி பிசகாமல் நடந்து கொண்டேயிருப்போம்! இறுதியில் வெற்றி நமதே!"

வாசு கூறியது கார்த்திக்குமட்டுமல்ல. இந்த நாட்டு அனைத்து மக்களையும் பார்த்துத்தான் அவன் அப்படிச் சொன்னான்!

அதோ, அதோ! நீங்களும் நானும் எதிர்பார்த்ததற்குமுன்னரே பேரணி கிளம்பிவிட்டது! பேரொலி எழுந்துவிட்டது! இனி வெற்றி உறுதி! நாமும் பேரணியில் திரளுவோம்! நாமும் பேரொலியோடு முழங்குவோம்! இனி வெற்றி உறுதி! அதோ அந்த வெற்றி தரும் நன்னாள்! அந்நாள் பொன்னாள்! அதுவே விடுதலை தரும் நன்னாள்! நம் நாள்!

(முற்றும்)

# அன்பழகன் வெற்றி

சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதிக்கான இடைத் தேர்தலில், மேல் சட்டசபை உறுப்பினராகத் தோழர் க. அன்பழகன் அவர்கள் அதிகப்படியான வாக்குச் சீட்டுகள் பெற்று வெற்றி அடைந்துள்ளார்.

அன்பழகன் கழக முன்னணி வீரர்களில் ஒருவர் என்பது மட்டுமல்ல, அவர் ஆசிரியர் துறையிலும் நல்ல பயிற்சியும் தகுதியுமுடையவர்.

பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்து பணியாற்றியவர்.

அவருக்கு ஆதரவு தந்து வெற்றி தேடித்தந்த சென்னை-செங்கற்பட்டு மாவட்ட ஆசிரியர்களுக்கும், மற்றும் அவரது வெற்றிக்கு அயராது உழைத்த நண்பர்கள், அன்பர்கள், தோழர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி அறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், வெற்றிபெற்ற அன்பழகன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துக் கூறுகிறோம். —ஆசிரியர்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்—
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.